பக்கங்கள் 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர்ஆண்டு 2022 ஐப்பசி 08 வெள்ளிக்கிழமை 25.10.2024 கதிர் 382

# இஸ்ரேலியர்கள் விவகாரம் இதுவரை மூன்று பேர் கைது

## மக்களை மிரட்டி அரசியல் செய்யவேண்டாம் என்கிறார் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

அறுகபே குடா பகுதியில் இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். எனவே தாக்குதல் எச்சரிக்கை குறித்து வதந்திகளைப் பரப்பி, மக்களை மிரட்டி வாய்ப்பை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டாம் என்று அரசியல்வாதிகளை அவர் கடிந்துகொண்டார். சுற்றுலாவிகளையும் பொது மக்களையும் பாதுகாப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் இவற்றைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

## இது ரகசியம் அல்ல!

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி புதிய சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளது. அதன் வேட்பாளர்களில் ஒருவரின் இரு சகோதரர்கள் இராணுவத்தில் பணியாற்றுகிறார்கள் என்பது அதன் ஒட்டுமொத்தக் கொள்கை நிலைலப்பாட்டையும் கேள்விக்குப்படுத்தப் சமூக ஊடகப் போராளிகளுக்குப் போதுமானதாக இருக்கின்றது.

மேலோட்டமாக இந்தக் குற்றச்சாட்டை முன்னணி மறுக்கின்றது. ஆனால், அது உண்மையா- ☞2

## இந்திய விமானத்திற்கு நேற்றும் குண்டுப் புரளி

இந்தியாவின் மும்பையிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்றுப் பிற்பகல் வந்தடைந்த 'விஸ்தாரா' விமானத்தில் வெடிகுண்டுகள் இருப்பதாக வெளியான தகவல் காரணமாக அது அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. விசாரணைகள் மற்றும் சோதனைகளின் பின்னர் அது வெறும் புரளி என்பது உறுதிப்படுத்தப்பட்டது. ☞2

## முட்டை விலை 41 ரூபாயாகும்

ஒரு முட்டையை 41 ரூபாவுக்கும் குறைவான சில்லறை விலையில் விற்பனை செய்யும் வகையில் முட்டைகளை சந்தைக்கு விடுவதற்கு முட்டை உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் இணக்கம் ☞2

## தேர்தல் சட்டங்களை மீறியதற்காக கஜேந்திரகுமார், பார்த்தீபன் கைது

### உடனடியாகவே பொலிஸ் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம் வடமராட்சியில் தேர்தல் சட்டங்களுக்குப் புறம்பாகப் பரப்புரைகளில் ஈடுபட்டிருந்த சமயம் கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி வேட்பாளர் பார்த்தீபன், அவரது சராதி ஆகியோர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சட்டத்திற்குப் புறம்பாக பரப்புரை நடவடிக்கையின்போது துண்டுப் பிரசுரங்களை விநியோகதித்த காரணத்தால் கஜேந்திரகுமார் நெல்லியடியிலும் ☞2

## ஸ்ரீரங்காவின் கைதுக்குத் தடை வாக்குமூலம் வழங்க உத்தரவு

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக கொழும்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட வழக்கில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ ரங்காவை எதிர்வரும் 7ஆம் திகதி வரை கைது செய்வதற்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது மேன்முறையீட்டு நீதிமன்றம். சிறீரங்காவிற்கு கொழும்பு நீதிவான் முன்பிணை வழங்க மறுத்த பின்னணியில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அவதூறான சுவரொட்டிகளை ஒட்டிய சம்பவம் தொடர்பில் 48 மணித்தியாலங்களுக்குள் ரங்கா பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ரங்கா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலித்த மேல்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல ☞2

## எமது பரப்புரையைக் குழப்பவே பார்த்தீபன் உட்பட இருவர் கைது

### மணிவண்ணன் குற்றச்சாட்டு

தமிழ் மக்கள் கூட்டணியின் பரப்புரை நடவடிக்கையைக் குழப்புவதற்காகவே பருத்தித்துறையில் எமது வேட்பாளர் பார்த்தீபன் உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர் என்று குற்றஞ்சாட்டினார் அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் மணிவண்ணன்.

பார்த்தீபனின் கைது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர், தமது கட்சியின் பிரசார நடவடிக்கையை குழப்புமாறு வேறு சில கட்சி- ☞2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அரசியலாக்கவே வேண்டாம்

### ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை அரசியலாக்க வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்த சிறப்பு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் ☞8

## இஸ்ரேலியர்கள் 22 பேர் நேற்று வெளியேற்றம்

இலங்கைக்கு சுற்றுலாவிகளாக வந்திருந்த இஸ்ரேலியர்கள் 22 பேர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள அறுகம்பே பகுதியில் நடத்த திட்டமிடப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக இலங்கையில் தங்கியிருப்பது ஆபத்தானது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகமும், இஸ்ரேலிய ☞8

## தேர்தல் திகதிக்கு எதிரான மனுவை நவ. 4 பரிசீலிக்க நீதிமன்று முடிவு

அரசமைப்புக்கு மாறாக நாடாளுமன்றத் தேர்தலை நவம்பர் 14 நடத்த முடியாது என்று தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை நவம்பர் 4 பரிசீலினைக்கு எடுத்துக்கொள்வது என்று உயர் நீதிமன்றம் நேற்று முடிவு செய்தது.

இந்த மனு உச்ச நீதிமன்ற நீதிபதி அர்ஜுன ஒபேசேகர முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. சிவில் அமைப்பின் செயற்பாட்டாளரும், 'அப்பி ஸ்ரீலங்கா' அமைப்பின் அழைப்பாளருமான பிரியந்த ஹேரத் தாக்கல் செய்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்,

சட்டமா அதிபர், ☞2

## நாமலிடம் விசாரணை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச நேற்று குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது.

தாய்லாந்தில் இருந்து கணக்கின் ஊடாக 200 மில்லியன் ஷரூபாய் பெறப்பட்ட சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக நாமல் ராஜபக்ஷ இன்று 23 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்தினல் ஆஜராகியுள்ளார்.

## குடித்தொகை கணக்கெடுப்பில் தகவல் ரகசியம் காக்கப்படும்

### சரியான தகவல்களை வழங்கக் கோரிக்கை

குடித் தொகைக் கணக்கெடுப்பின்போது மக்கள் வழங்கும் தனிப்பட்ட தகவல்களின் இரகசியத் தன்மை முழுமையாகப் பாதுகாக்கப்படுவதாகவும், மக்கள் சரியான தகவல்களை வழங்குவதற்கு சட்டத்திற்கு கட்டுப்பட்டிருப்பதாகவும் குடித்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறையின் இயக்குநர் ஜெனரல் திருமதி செனவிரத்ன தெரிவித்தார். ☞8

## 3 கைத் துப்பாக்கிகளுடன் மூவர் மாத்தறையில் கைது

மாத்தறை மாலிம்பட பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்து மூன்று ரிவோல்வர்களுடன் மூவர் கைது செய்யப்பட்டனர் என்று மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மாத்தறை பொலிஸ் விசேட பணியக அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய ☞8

## இனி இது..

னதுதான் என்று உறுதிப்படுத்த முடிகின்றது. அரச ஆவணப் பதிவுகளின்படி முன்னணியின் பெண் வேட்பாளரின் இரு சகோதரர்கள் இராணுவத்தில் பணியாற்றுகின்றனர்.

2016 முதல் அவர்கள் இராணுவப் பணியில் உள்ளனர். இரு சகோதரர்களில் ஒருவர் கடந்த நான்கைந்து மாதங்களாக பணிக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருக்கின்றார் என்று தெரிகிறது. அவர் இராணுவப் பணியிலிருந்து விலகிவிட்டாரா இல்லையா என்பது பற்றிய பதிவுகள் எதுவும் அரச ஆவணங்களில் இல்லை.

முன்னணியின் வேட்பாளர் நீண்டகாலமாகக் கட்சியின் உறுப்பினர் என்றும் அவரது சகோதரர்கள் பற்றிய தகவல்கள் தமக்குத் தெரியாது என்றும் கட்சியின் ஒரு தரப்பினர் சமாளிக்கப் பார்த்தாலும், இந்த விடயத்தை முன்வைத்து சமூக ஊடகங்களில் முன்னணியைக் கடித்துக் குதறுவதில் எக்கச்சக்கம் பேர் மும்முரமாக இருப்பதைப் பார்க்க முடிகிறது.

அதற்குக் காரணம், இராணுவத்துடன் பேசுவதே குற்றம், சிங்கக்கொடி இருக்கும் இடத்தில்கூட நாம் இருக்கமாட்டோம் என்று முன்னணியின் முக்கிய தலைவர்கள் இதுவரை கூறிவந்ததுதான். அடுத்தவர்களைத் துரோகிகளாக்கியவர்கள் இன்று குற்றவாளிக்கூண்டில் நிற்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

......................

இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தப்போவதாகப் பரவிய செய்திகளைத் தொடர்ந்து, மட்டக்களப்பிலும் நேற்றிரவு குண்டுத் தாக்குதல் குறித்த பதற்றம் ஏற்பட்டது. மட்டக்களப்பு நீதிமன்றக் கட்டடத் தொகுதியைக் குண்டு வைத்துத் தகர்த்தப் போவதாக நேற்று வியாழக்கிழமை இரவு வந்த தொலைபேசி அழைப்பையடுத்து அந்தப் பகுதியில் விசேட பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

நீதிமன்றதைக் குண்டு வைத்துத் தகர்த்தப் போவதாக நீதிமன்றப் பதிவாளருக்குத் தொலைபேசி அழைப்பு ஒன்று நேற்று இரவு வந்ததையடுத்து உடனடியாக அவர் அது குறித்துப் பொலிஸாருக்கு அறித்துள்ளார்

இதனையடுத்து நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்குப் பொலிஸ் உயர் அதிகாரிகள் சென்று பார்வையிட்டதுடன் கட்டடத்தைச் சுற்றிவர பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் பொலிஸ் ரோந்து நடவடிக்கையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

......................

புலம்பெயர் முதலாளிகள் ஈழத் தமிழர்களின் அரசியலை தங்கள் பணத்தால் தீர்மானிக்க முயல்கின்றனர் என்பது பற்றி இந்தப் பத்தியில் அடிக்கடி தொட்டுக்காட்டி வந்துள்ளேன். தாம் விரும்புவர்களை, தமக்கு ஆமாம் சாமி போடுபவர்களை, தமக்கு வாய்த்த அடிமைகளை ஈழத் தமிழர்களின் தலைவர்களாக்குவதில் அவர்கள் குறியாக இருக்கின்றார்கள். அது தொடர்பான அண்மைய சம்பவமாக புலம்பெயர் தமிழ் முதலாளி ஒருவரால் தொடங்கப்பட்ட தமிழ் பத்திரிகையின் ஆசிரியர் அந்தப் பதவியிலிருந்து விலகியிருக்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தலில் அந்தப் பத்திரிகை யாரை ஆதரிக்கவேண்டும் என்று புலம்பெயர் முதலாளி தரப்பால் ஒரு பட்டியல் வழங்கப்பட்டிருக்கின்றது. வன்னியில் வேட்பாளராக உள்ள ஒருவரையும், ஏற்கனவே அவருக்கு கோடிகளில் காசு கொடுத்திருக்கிறார்கள், ஒரு பெண் வேட்பாளரையும் மற்றொருவரையும் பெயர் குறிப்பிட்டு இவர்களை மட்டுமே முன்னிலைப்படுத்தும்படியும் ஏனைய வேட்பாளர்களுக்குப் பெரியளவில் முக்கியத்துவம் கொடுக்கவேண்டாம் என்றும் ஆசிரியர் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்.

அதையடுத்து நீங்களும் வேண்டாம் உங்கள் பத்திரிகையும் வேண்டாம் என்று உதறிவிட்டுப் புறப்பட்டுவிட்டார் அந்த ஆசிரியர். புலம்பெயர் வியாபார நலன்களுக்காகத்தான் ஈழத்தமிழர்களின் 75 வருட கால உரிமைப்போராட்டமா என்பதுதான் இப்போது உள்ள பெரும் சவால்.

இடிமின்னல்

## இஸ்ரேலியர்கள்...

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரே இத்தகைய தாக்குதல் தொடர்பான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. இது இந்திய புலனாய்வு அமைப்புகளால் வெளிப்படுத்தப்பட்ட எச்சரிக்கையல்ல. உலகெங்கிலும் உள்ள இஸ்ரேலியர்களுக்கும் இதுபோன்ற எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எமது ஆளும்தரப்பு மிகவும் தெளிவாகவும் வலுவாகவும் எடுத்துள்ளது. எனவே சுற்றுலாப் பயணிகள் எவ்வித அச்சமும் கவலையும் இன்றி இலங்கைக்கு வருகை தர முடியும்.

ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாத்துறை எவ்வித அச்சமுமின்றி இயங்கமுடியும். தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விடுதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொத்துவில் மற்றும் அறுகம்பே பகுதிகளில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மூவருமே இலங்கையர்கள்தான்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன, அவர்கள் தொடர்பான மேலதிக விவரங்களை வெளியிட முடியாது. அவ்வாறு செய்வது விசாரணைகளுக்கு இடையூறாக அமையும்.

ஒரு மாதத்திற்கு மு-ன்னரே இது தொடர்பான புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தன. அதையடுத்து உடனடியாக அந்தப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது.

இம்மாத தொடக்கத்தில் இஸ்ரேலிய பிரஜைகள் மீது தாக்குதல் நடத்தப்படக் கூடிய சாத்தியம் குறித்து வெளிநாட்டு புலனாய்வு சேவைகளிடமிருந்து இலங்கை அதிகாரிகளுக்கு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக அமைச்சர் ஹேரத் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தின் காலத்திலும் இவ்வாறான தகவல்கள் அதிகாரிகளுக்கு கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

"தகவல் உறுதிப்படுத்தப்படும் வரை நாங்கள் பொதுமக்களுக்கு தெரிவிக்கவில்லை, ஆனால் தகவல் கிடைத்தவுடன் நாங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தோம்," என்று அவர் மேலும் கூறினார்.

தவறான செய்திகளுக்கு பலியாக வேண்டாம் என்று பொதுமக்களை வலியுறுத்திய அவர், நிலைமையை அரசியல் லாபத்திற்காக பயன்படுத்திக் கொள்வதற்கு எதிராக எச்சரித்தார், பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது என்று வலியுறுத்தினார்.

சுற்றுலாப் பயணிகளைப் பாதுகாக்க விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் பொதுமக்களுக்கு உறுதியளித்தார்.

இம்மாத தொடக்கத்தில் இஸ்ரேலிய இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடிய சாத்தியம் குறித்து வெளிநாட்டுப் புலனாய்வு சேவைகளிடமிருந்து இலங்கை அதிகாரிகளுக்கு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தன. கடந்த ஆட்சியாளர்களின் காலத்திலும் இவ்வாறான தகவல்கள் அதிகாரிகளுக்கு கிடைத்துள்ளன.

தகவலை உறுதிப்படுத்தப்படும் வரை நாங்கள் அதனைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கவில்லை, ஆனால் தகவல் கிடைத்தவுடன் நாங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தோம்.

இலங்கையர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதற்கான சாத்தியங்கள் குறித்து எந்தப் புலனாய்வுத் தகவல்களும் இல்லை. அதனால் மக்கள் தேவையற்ற அச்சத்துக்கு உள்ளாக வேண்டாம்.

இலங்கையில் 575 இஸ்ரேலியர்கள் தங்கியிருந்தார்கள், இஸ்ரேலின் அறிவிப்பை அடுத்து, அந்த நாட்டைச் சேர்ந்த சுற்றுலாவிகளில் ஒரு குழுவினர் உடனடியாக வெளியேறியுள்ளனர்.

பொதுமக்கள் தவறான செய்திகளுக்குச் செவிசாய்க்கவேண்டாம். நிலைமையை அரசியல் லாபத்திற்காக பயன்படுத்திக்கொள்ளச் சிலர் முற்படுகிறார்கள். பாதுகாப்பை உறுதி செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஆளும்தரப்பு எடுத்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளைப் பாதுகாக்க விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்றார்.

## தேர்தல்...

பார்த்தீபன் பருத்தித்துறையிலும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பார்த்தீபன் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டதை வீடியோ எடுத்த அவரது சாரதியும் பின்னர் கைது செய்யப்பட்டார் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. சுமார் ஒன்றரை மணி நேரத்தில் அவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். மாலையில் கைது செய்யப்பட்ட பார்த்தீபனும் அவரது சாரதியும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் இரவு 8 மணியளவில் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் மூவருக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். தேர்தல் சட்டங்களின்படி வேட்பாளர் ஒருவரோ அவரது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களோ தனது பரப்புரையின் போது துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க முடியாது. அதை மீறி கஜேந்திரகுமாரும் பார்த்தீபனும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த குற்றத்திற்காகவே கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தம்மீதான இந்தக் குற்றச்சாட்டை வேட்பாளர்கள் இருவரும் மறுத்தனர். தனது ஆதரவாளர்கள் துண்டறிக்கைகளை விநியோகித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த தாம் தெரிந்தவர்கள் சிலருடன் உரையாடிக்கொண்டிருந்தபோதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவித்தனர்.

## ஸ்ரீரங்காவின்...

கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் ஆயம் முன்னிலையில் இந்த மனு பரிசீலிக்கப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரங்கா சமர்ப்பித்த மனுவில் பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர், பதில் பொலிஸ் மா அதிபர், கொழும்பு குற்றப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக சுவரொட்டி ஒட்டப்பட்ட சம்பவத்துடன் தமது கட்சிக்காரருக்கு எவ்வித தொடர்பும் இல்லை எனவும், ஆனாலும் அவரைக் கைது செய்வதற்குப் பொலிஸார் முயற்சிக்கிறார்கள் என்றும், அவர் எப்போது வேண்டுமானாலும் வாக்குமூலம் வழங்க தயார் எனவும், அவர் கைது செய்யப்படும் நிலை இருப்பதால் வாக்குமூலம் வழங்க முடியாதிருப்பதாகவும் ரங்கா சார்பில் நீதிமன்றில் முற்பட்டிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தெரிவித்தார்.

ரங்கா நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிடுகின்றார் என்று மனுதாரரின் சட்டத்தரணி முன்வைத்த வாதத்தையும் கருத்திக்கொண்டு அவரைக் நவம்பர் 7 வரை கைது செய்யாதிருக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

மனுதாரர் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதை உறுதிப்படுத்தும் வர்த்தமானி அறிவிப்பை அடுத்த தவணையின்போது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவும் உத்தரவிட்டது.

## தேர்தல் திகதிக்கு...

ஜனாதிபதியின் செயலாளர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் அக்டோபர் 4ஆம் தேதி முதல் 11ஆம் தேதி வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தல் சட்ட விதிகளின்படி அதிலிருந்து ஐந்து வாரங்களுக்கு குறையாமல் ஏழு வாரங்களுக்குள் தேர்தலுக்கான தேதியை நிர்ணயிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஒக்டோபர் 11 முதல் ஐந்து வார கால அவகாசம் என்பது நவம்பர் 15 முடிவடையும் போது நவம்பர் 14 தேர்தல் அறிவிக்கப்பட்டமை சட்டவிரோதம் என்று மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே அன்றைய தினம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது சட்டத்திற்கு முரணானது என்று நீதிமன்றம் அறிவிக்கவேண்டும் என்று மனுதாரர் கோரியுள்ளார்.

## எமது....

களின் தூண்டுதலின் பேரில்தான் பருத்தித்துறை பொலிஸார் செயற்பட்டார்களா என்றும் கேள்வி எழுப்பினார்.

"பருத்தித்துறை நகர பகுதியில் பார்த்தீபன் தலைமையிலான அணியினர் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்தபோது பார்த்தீபனும் ஆதரவாளர்களும் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். எமது கட்சியினர் இவ்வாறு கைது செய்யப்பட்டிருப்பது எமது பிரசாரத்தை குழப்பும் செயலாகவே உள்ளது. எங்களது கட்சியின் பரப்புரையைக் குழப்புமாறு வேறு சில கட்சிகளின் தூண்டுதலில் பொலிஸார் இவ்வாறு செயற்பட்டார்களா என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது" என்றார் மணிவண்ணன்.

எமது பரப்புரையைத் திட்டமிட்டு குழப்பும் வகையான செயற்பாடாகவே இதனை நாம் பார்க்கின்றோம். இது எமது அடிப்படை உரிமைகளை மீறுகின்ற செயற்பாடு. இந்த செயலை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் -என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்திய...

இந்தியாவின் மும்பையிலிருந்து விஸ்தாரா ஏர்லைன்ஸின் யுகே -131 விமானம் நேற்றுப் பிற்பகல் 2.56 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. ஏர்பஸ் ஏ-320 ரகமாக இந்த விமானத்தில் 108 பயணிகளும் 08 ஊழியர்களும் இருந்தனர்.

மும்பையில் இருந்து கொழும்பு நோக்கி வந்த இந்த விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டாலும், எந்த அச்சுறுத்தலும் இல்லை என்று கட்டுநாயக்க விமான நிலைய முகாமைத்துவத் தலைவர் அருண ராஜபக்ச கூறுகிறார்.

24 அக்டோபர் 2024 அன்று 15:15 மணிக்கு கட்டுநாயக்காவுக்கு மும்பையிலிருந்து கொழும்புக்கு வரவிருந்த விஸ்தாரா விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாகக் கிடைத்த தக விதமாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய நிர்வாகம் முழு அவசரநிலையை அறிவித்தது.

நெறிமுறையின்படி அனைத்து முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பாதுகாப்பு முகவர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

107 பயணிகள், ஒரு கைக்குழந்தை மற்றும் 8 பணியாளர்களுடன் விமானம் 14:55 மணிக்கு அவசரமாக விமான நிலையத்தில் பாதுகாப்பாக தரையிறங்கியது. அனைத்து பயணிகளும் விமானத்தில் இருந்து பயணிகள் முனைய கட்டடத்திற்கு விரைவாக அழைத்துச் செல்லப்பட்டனர்,

அங்கு அனைத்து பயணிகளுக்கும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது - என்ற அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கு முன்னரும் இந்திய விமானம் ஒன்றில் வெடிகுண்டு இருப்பதாக மிரட்டல் கிடைத்ததை அடுத்து அதுவும் கட்டுநாயக்காவில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

ஆனால் அப்படி எந்த வெடிப் பொருளும் விமானத்தில் இருக்கவில்லை.

## முட்டை...

தெரிவித்துள்ளனர் என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

முட்டை உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே பிரதிநிதிகள் இந்த இணக்கத்தை வெளிப்படுத்தினர் என்று நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்தார்.

வர்த்தக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எம்.எம்.நைமுதீன் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்ட அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க, தற்போது சந்தையில் 45 ஷரூபாவிற்கும் குறைவான சில்லறை விலையில் ஒரு முட்டையை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவித்தார்.

தற்போது நாளொன்றுக்கு முட்டை உற்பத்தி 85 இலட்சமாக அதிகரித்துள்ளதாகவும், மொத்த விலையில் 35.36 ஷரூபாவிற்கு ஒரு முட்டை பண்ணையில் இருந்து விடுவிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நிமலராஜன் கொலை விசாரணை சர்வதேச பங்கேற்புடன் வேண்டும்

## முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் கோரிக்கை

இலங்கை பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த உயர் பாதுகாப்பு வலயத்தில் தமிழ் ஊடகவியலாளர் கொல்லப்பட்டு 24 வருடங்களாகியும் நீதி கிடைக்காத நிலையில் சர்வதேசக் கண்காணிப்பு மற்றும் பங்கேற்புடனான விசாரணை நடத்தப்படவேண்டும் வன்னி மண்ணின் ஊடகவியலாளர் அமைப்பு ஒன்று வலியுறுத்தியுள்ளது.



அச்சமற்ற, எளிமையான ஊடகவியலாளராக அறியப்பட்ட, துப்பாக்கிச்சூடு நடத்தி மௌனிக்கப்பட்ட நிமலராஜன் மயில்வாகனத்தின் 24 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் கையொப்பமிட்ட ஊடக அறிக்கையில் சர்வதேச நீதித்துறை அதிகாரம் கொண்ட விசாரணையின் ஊடாக ஊடகவியலாளர்களைப் பாதுகாக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

'நிமலராஜனுக்கான நீதி என்பது ஒரு வழக்கைத் தீர்ப்பது மட்டுமல்ல வன்முறை மற்றும் பயம் தடையின்றி நீடிக்க உதவும் கட்டமைப்பை அகற்றுவது பற்றியது. எனவே, இந்தக் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறவும் மற்றும் அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் பாதுகாப்பை உறுதி செய்வதற்குமான உடனடி நடவடிக்கையாக, சர்வதேச ஊடக கண்காணிப்பாளர்கள், விசாரணையாளர்கள் மற்றும் சட்ட நிபுணர்களின் பங்களிப்புடன் நீதித்துறை அதிகாரம் பெற்ற விசாரணையை நாங்கள் கோருகிறோம்'.

தமிழ் ஊடகவியலாளர் நிமலராஜன் மயில்வாகனம் படுகொலை செய்யப்பட்டு 24 வருடங்கள் கடந்துள்ள நிலையில் அவருக்கு இதுவரை நீதி நிலைநாட்டப்படவில்லை என்பதை வலியுறுத்தும் முல்லைத்தீவு ஊடக அமையம், அவரது படுகொலை உள்ளிட்ட பலரது படுகொலைகளுக்கு நீதி வழங்கப்படாமை இலங்கையில் தொடரும் தண்டனையின்மை கலாச்சாரத்தை நிலைநிறுத்துவதோடு, இது குற்றவாளிகள் பின்விளைவுகளுக்கு அஞ்சாமல் செயல்பட அனுமதிப்பதாக சுட்டிக்காட்டியுள்ளது.

ஒரு மாதத்திற்கு முன்னர் ஆட்சிக்கு வந்த புதிய ஜனாதிபதியின் அரசாங்கம் கொல்லப்பட்ட மற்றும் காணாமற்போன சுமார் 50 ஊடகவியலாளர்கள் குறித்து விசாரணைகளை முன்னெடுக்காமை குறித்து முல்லைத்தீவு ஊடகவியலாளர் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

'ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் புதிய அரசாங்கம், ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் கொலை செய்யப்பட்டமை உட்பட பல உயர்மட்ட வழக்குகளை மீள ஆரம்பிப்பதாக அறிவித்துள்ள போதிலும், வெளிப்படையான முன்னேற்றம் இன்னும் காணப்படவில்லை. 'தராகி' சிவராமின் படுகொலைக்கு நீதி கிடைக்காமல் நீண்ட காலம் கடந்துவிட்ட நிலையில், பெரும்பான்மையான தமிழ் ஊடகவியலாளர்கள் உள்ளடங்கலாக குறைந்தது 44 ஊடகவியலாளர்களின் கொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டமை குறித்து விசாரணை நடத்தாததன் நியாயத்தை புதிய நிர்வாகம் இன்னும் தெளிவுபடுத்தவில்லை.'

தமிழ் பேசும் ஊடகவியலாளர்கள் புலனாய்வுத்துறை மற்றும் இராணுவம் உட்பட அரச பாதுகாப்பு இயந்திரங்களால் துன்புறுத்தல், அச்சுறுத்தல் மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து எதிர்கொண்டு வருவதாகவும், இந்நிலை அச்சத்தின் சூழலை மேலும் ஆழமாக்கி அவர்களின் பேச்சு சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதாக முல்லைத்தீவு ஊடக அமையம் தனது அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஊடக அடக்குமுறையைக் கண்டித்து, ஊடக அமையம் விடுத்துள்ள அறிக்கையில், ஊடகவியலாளர்களை குறிவைத்து அச்சுறுத்துபவர்களை ஊக்குவிக்கும் இந்த தண்டனையில்லா கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு கோரியுள்ளது.

'நாங்கள் தொடர்ந்து துன்புறுத்தப்படுவதைக் கண்டிப்பதோடு, ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் மற்றும் குறிவைப்பவர்களுக்கு தைரியம் அளிக்கும் இந்த தண்டனையின்மைக் கலாச்சாரத்திற்கு முடிவு கட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம். ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் உண்மையை வெளிக்கொணரும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பே முதன்மையாக இருக்க வேண்டும், அவர்களை ஆபத்துக்கு உட்படுத்துவதல்ல.'

கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் மற்றும் தண்டனையிலிருந்து விடுபடுவதை தீவிரமாக ஊக்குவிக்கும் ஆழமாக வேரூன்றிய கட்டமைப்புகள் சீர்திருத்தப்படாத வரை, படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஒரு ஊடகவியலாளரின் விசாரணை ஊடக சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்காதெனவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கின் செய்திகளை சிங்களத்தில் அதிகம் அறிக்கையிட்ட நிமலராஜனை தென்னிலங்கையில் எந்த ஊடக அமைப்பும் நினைவுகூர்ந்ததாக தெரியவில்லை, ஆனால் யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஊடக அமையங்கள் இம்முறையும் நிமலராஜன் மயில்வாகனத்தை நினைவு கூர்ந்திருந்தன.

அழிவுகரமான யுத்தம் மற்றும் அதனால் பாதிக்கப்பட்ட வடக்கின் தமிழ் மக்கள் குறித்து யுத்த பூமியிலிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் ஊடாக உலகத்தின் கவனத்தை ஈர்க்க நிமலாராஜனால் முடிந்தது.

ஹரய, பிபிசி மற்றும் வீரகேசரி ஆகிய பத்திரிகைகளுக்கு தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளில் செய்திகளை வழங்கி வந்த நிமலராஜன், கடந்த 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி இரவு, வீரகேசரி நாளிதழில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் கட்டுரை எழுதிக் கொண்டிருந்த போது யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் இன்றும் நீதி வழங்கப்படவில்லை.

2003ஆம் ஆண்டு, மயில்வாகனம் நிமலராஜனை அவரது வீட்டில் வைத்து கைக்குண்டுகளால் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட அரசாங்கத்துடன் இணைந்த ஈபிடிபி துணை இராணுவக் கும்பலை வவுனியா நீதிமன்றம் விடுவித்தது.

இக்கொலையுடன் நேரடி தொடர்புடையவராக சந்தேகிக்கப்படும் ஈபிடிபியின் நெப்போலியன் எனப்படும் செபஸ்டியன் பிள்ளை ரமேஷ் பொலிஸாரால் விசாரிக்கப்படாமல் நாட்டை விட்டு வெளியேறி பிரித்தானியாவில் தஞ்சம் கோரி வருவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இலங்கையில் ஆள்கடத்தல்கள், சட்டத்திற்கு புறம்பான கொலைகள், சித்திரவதைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு நாட்டில் நீதி கிடைக்கும் என்பதில் நம்பிக்கையில்லாத தமிழ் மக்கள் சர்வதேச நீதியை கோரி நிற்கின்றனர்.(05)

# தமிழ் மக்கள் 80 வீதமான வாக்குகளை அளித்தால் திருகோணமலையில் 2 பிரதிநிதிகளை பெறலாம்

## இலங்கை தமிழ் அரசு கட்சி வேட்பாளர் குகதாசன் தெரிவிப்பு

இம் முறை நடை பெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் 80 சதவீதமான வாக்குகளை அளித்தால் இரு பிரதிநிதிகளை பெறலாம் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுன்ற முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.



திருகோணமலையில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இருந்தால் தான் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 1985 ஆம் ஆண்டு முதல் நில அபகரிப்பு செய்யப்பட்ட விவசாய மக்கள் காணிகளை மீளப் பெறலாம் வன இலாகா 4000 இற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களையும் தொல்பொருள் திணைக்களம் 2600 ஏக்கர்களையும் இது போன்று இலங்கை துறை முக அதிகார சபை ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர்களையும் பௌத்த பிக்குகள் விகாரைக்கான கட்டுமானம் என்ற போர்வையில் பல நிலங்களை அபகரித்துள்ளனர்.

இதனை மீட்க தமிழ் மக்களுக்கான பிரதிநிதிகள் தேவை. எனவே தான் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே குடையின் கீழ் செயற்படுவதுடன் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் இரு ஆசனங்களை பெறலாம் ஒற்றுமையாக செயற்படாவிட்டால் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் ஆகிவிடும்.

யாழ்ப்பாணத்தில் பல கட்சிகளும் பல சுயேச்சைக் குழுக்களும் களமிறங்கியுள்ளன தமிழ் வாக்குகளில் மொத்தமாக 98ஆயிரம் வாக்குகள் காணப்படுகிறது. இதில் சுமாராக எழுபதாயிரம் வாக்குகளையாவது தமிழ் மக்கள் அளிக்க வேண்டும் வாக்குகளை அளிப்பதற்காக மக்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

இஸ்லாமியர்கள் என்பது வீதமான வாக்குகளை அளிக்கின்றனர் தமிழ் மக்கள் 65 வீதமான வாக்குகளையே அளிக்கின்றனர். எனவே இம் முறை 85 வீதமான வாக்குகளை அளிக்க வேண்டும் அப்போது தான் நம் மண்ணின் தமிழ் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட்டு உரிமைகள் அபிவிருத்திகளை பெற முடியும்.

இந்தியாவில் 15 பேரை வைத்து மோடி ஆட்சி நடத்துகிறார் தெலுங்கான மக்கள் ஒற்றுமை காரணமாகவே இந்த ஆட்சி நடைபெறுகிறது மொத்தமாக 545 உறுப்பினர்களை வைத்து அங்கு ஆட்சி இடம் பெறுகிறது. அது போன்று இங்கு 225 உறுப்பினர்களில் நாம் 25 தமிழ் பிரதிநிதிகளை பெற வேண்டும்.

இவ்வாறாக தான் நாம் இலங்கை தமிழ் அரசு கட்சி ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப் போன்ற கட்சிகள் ஒற்றுமையாக இணைந்துள்ளோம். இதனால் நம் பிரதிநிதித்துவத்தை ஒற்றுமை மூலமே பாதுகாக்க முடியும். - என்றார .(05)



# யாழ்கோ விற்பனை நிலையங்களின் முகாமையாளர்களுக்கு விழிப்புணர்வு

யாழ்கோ பால் தொழிற்சாலையின் பால் விற்பனை நிலைய முகாமையாளர்களிற்கான உணவு கையாளல் மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகள் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் புதன்கிழமை இடம்பெற்றது.

இதில் நல்லூர் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் நிர்மலானந்தன் மற்றும் திருநெல்வேலி பொது சுகாதார பரிசோதகர் சஞ்சீவன் ஆகியோரால் விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது பால் விற்பனை நிலையங்களில் பேணப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகள், விற்பனை நிலையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த வேலைகள் தொடர்பாக விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

குறைபாடுகள் நிவர்த்தி செய்வதற்காக இரு வார கால அவகாசம் வழங்கப்பட்டதுடன், நிவர்த்தி செய்ய தவறுமிடத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொது சுகாதார பரிசோதகர் சஞ்சீவனால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கிளை முகாமையாளர்கள், யாழ்கோ நிறுவன தலைவர், பொது முகாமையாளர், கணக்காளர் மற்றும் நிறுவன பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அண்மையில் சுகாதார சீர்கேடு காரணமாக யாழ்கோ பால் தொழிற்சாலை சீல் வைத்துமூடப்பட்ட நிலையில், இவ்விழிப்புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வேண்டும்

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 128 மீனவர்கள் மற்றும் 199 படகுகளையும் உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கும்படி இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அண்மையில் ஆளும் தரப்பினருடன் இந்தியத் தூதுவர் சந்திப்பு நடத்தி இந்த விவகாரம் குறித்தும் பேசிய நிலையில் இந்தக் கடிதம் முதல்வரால் எழுதப்பட்டுள்ளது.

"ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தைச் சேர்ந்த 16 மீனவர்கள் 2 இயந்திரப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நிலையில் ஒக்.23-எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். இதுபோன்ற கைது சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து மீனவர்களின் குடும்பங்களுக்கு துயரத்தை ஏற்படுத்துவது குறித்து நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தேன்.

இருப்பினும் இத்தகைய கைது நடவடிக்கைகள் தடையின்றி தொடர்வதுடன் அவை கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு இடையூறாக உள்ளன. எனவே இதுபோன்று நம் நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும் தமிழகத்தைச் சேர்ந்த 128 மீனவர்களையும் 199 மீன்பிடிப் படகுகளையும் விரைந்து விடுவிக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் கூட்டு நடவடிக்கைக் குழுவினால் முன்மொழியப்பட்ட ஆலோசனைகள் மீனவர்கள் வாழ்வை சீர்குலைக்கும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிலையான தீர்வினைக் கொண்டுவரும் என நான் நம்புகிறேன்" என்று ஸ்டாலின் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கடந்த பொதுத் தேர்தலில் மீனவர்கள் பிரச்சினையையும் கச்சதீவுப் பிரச்சினையையும் பெரியளவில் எடுத்துப் பேசிய பாரதீய ஜனதாக் கட்சி இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான உருப்படியான எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடக்கூடியது. இதுவரையில் இலங்கை இந்திய மீனவர்களுக்கு இடையிலும் அரசுக்களுக்கு இடையிலும் இது குறித்த பேச்சுகளுக்கோ தீர்வுககான முயற்சிகளுக்கோ எந்த அறிக்கையும் இல்லை.

இந்த விவகாரத்தில் இலங்கையின் வடக்கு கிழக்கு மீனவர்களே பெரிதும் பாதிக்கப்படுபவர்களாக இருந்த போதும், இந்திய மீனவர்களின் அத்துமீறலால் இவர்களின் வாழ்வாதாரம் இழக்கப்படுகின்றபோதும் அதனை ஒரு அரசியல் விவகாரமாகவே இரு நாட்டு அரசுகளும் அணுகுவதே இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் தொடர்வதற்கான காரணம்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியாவது இந்திய மீனவர்கள் எல்லை மீறுவதை முழுமையாகக் கட்டுப்படுத்தும் விதத்திலான இறுக்கமான நடவடிக்கைகளை எடுத்து இந்த விவகாரத்திற்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண முன்வரவேண்டும்.

# கர்வம், கௌரவம்





என். சத்திய மூர்த்தி

தேர்தல் காலம் என்று வந்து விட்டாலே, இலங்கையில், குறிப்பாக வட மாகாணம் மற்றும் யாழ்பாண அரசியல்வாதிகள், அண்டை நாடான இந்தியாவை குறைகூறத் தொடங்கி விடுவார்கள். இது அவர்களது வழமையான 'மீண்டும் பிழை விட்டோம்தானே' மனநிலைக்கு ஒத்துபோன நிலைபாடுதான்.

அது போன்று, இந்த முறையும் நாடாளுமன்ற தேர்தல் பரப்புரையின் ஊடாக சில தமிழ் வேட்பாளர்கள் இந்த பிரச்சினைக்கு உயிர்கொடுக்க முயன்று வருகிறார்கள். அவர்களுக்கு ஆதரவாகவும், அவ்வாறு இல்லாமல் தன்னிச்சையாகவும் சில ஊடகங்களும் அவ்வாறான கருத்துக்களை முன் வைக்கத் தொடங்கி உள்ளன.

இரு சாராரையும் பொறுத்தவரையில், இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா, தனது பங்களிப்பைச் சரியாக செய்வதில்லை. மாறாக, தமிழர் தரப்பிற்குத் தொடர்ந்து கொடுத்து வந்த தார்மீக ஆதரவை, இப்போதெல்லாம், இலங்கை அரச தரப்பிற்கே வழங்கி வருகிறது.

இதில் இடைசால் ஓட்டுவது போல், அவ்வப்போது, இந்தியாவின் புவிசார் அரசியலில் இலங்கையின் பங்களிப்பு, அதில் தமிழர் தரப்பின் பயன், மற்றும் சீன வல்லாதிக்கம் ஆகியவையும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. அதாவது, இங்குள்ளவர்கள், இந்திய அரசுக்கு, இராஜதந்திரத்தில் பாடம் எடுக்கிறார்கள்.

எப்போதோ, தாங்கள் பழகி அறிந்த ஒரு தலைபட்சமான அறிவுடன் இன்றைய, இருபத்தியோராம் நூற்றண்டில் இந்தியா என்னவெல்லாம் செய்யவேண்டும், செய்திருக்கவேண்டும் என்ற தங்கள் தனிப்பட்ட கருத்துக்களை அனைத்து தமிழ் மக்களின் கருத்தாகவும் இவர்களில் பலரும் பதிவிடுகிறார்கள். தற்போதைய சமூக வலைதள காலகட்டத்தில் அவர்களின் சொல்லாடல்கள் குறித்து கேட்கவே வேண்டாம்.

### குத்து – வெட்டு

இது இவ்வாறு என்றால், உண்மையான களநிலை என்ன? அன்று தொடங்கி இன்று வரை, இங்கே தமிழர் தரப்பு பத்தாகவும் பதினைந்தாகவும் பிரிந்திருக்கும். தங்களுக்குள் குத்து-வெட்டு என்று குஸ்தி போடும். போராளி குழுக்கள் காலம் தொடங்கி, உண்மையில் நடந்தது இதுதானே?

அனைத்து பிற போராளிக் குழுக்களையும் கருவறுத்துவிட்டு, விடுதலை புலிகள் அமைப்பு சாதித்தது என்ன? தமிழ் இனத்திடையே இருந்த பாரம்பரியமிக்க மிதவாத அரசியல்வாதிகளை ஒவ்வொருவராக போட்டுதள்ளியதுதானே? அதன் உச்சக்கட்டம்தானே, அமிர்ந்தலிங்கத்தின் படுகொலை?

ஏன், தங்களுக்குள்ளேயேகூட விடுதலை புலிகள் யாரை விட்டு வைத்தார்கள்? மாத்தையா போன்றோர் உயிர் இழந்தார்கள். கருணா, பிள்ளையான் போன்றோர், சரியான நேரத்தில், 'சரியான' முடிவு எடுத்ததால், இன்றளவும் உயிர் வாழ்கிறார்கள்.

இதுதான், சர்வாதிகாரம் படைத்த ஒரு அமைப்பு மற்றும் அதன் தலைவனின் நிலையாக இருந்தது என்றால், இனப்போர் முடிந்து பதினைந்து ஆண்டுகள் ஆன பின்னரும் இங்கு என்ன வாழ்கிறது? எங்கிருந்தோ இவர்களை இயக்கிக் கொண்டிருக்கும் பணம் படைத்த புலம்பெயர்ந்தோருக்கு ஒரு சிலர் ஆடிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், மற்றவர்கள் மட்டும் என்ன வாழ்கிறார்கள்?

ஒருபுறம் தொடர்ந்து, மிதவாத கட்சி என்று அரசியல் செய்யும் தமிழ் அரசு மற்றும் கஜேந்திரன் பொன்னம்பலம் தரப்பினரிடையே ஒற்றுமை இல்லை. கடந்த சில ஆண்டுகளாக, தமிழ் அரசு கட்சியே சின்னாபின்னமாகி வருகிறது. ஏன், இன்றுகூட நாடாளுமன்றத் தேர்தலுக்கு பின்னர், இனப்பிரச்சினைக்கான தீர்வு திட்டத்தில் தமிழ் அரசு கட்சி இரண்டுபட்டால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இங்கு பிரச்சினையே, தங்களைத் தாண்டி, உலகில் மூளை உள்ள மக்களே இல்லை என்ற யாழ்பாணத்தாரின் இரத்தத்தோடும் இரத்த நாளங்களோடும் இணைந்த டி.என்.ஏ. சார்ந்த கர்வம். இதே வழியில் சென்று, தன்னைவிட அறிவுள்ள தமிழ் தலைவரே இல்லை என்ற தன்னிச்சையான, ஒருதலைபட்சமான வறட்டு கௌரவம்.

### இடைக்கால தீர்வு

உண்மையைச் சொல்லப்போனால், இன்றளவில், தமிழர் தரப்பில் பல கட்சிகளும் இந்தியாவால் பெற்று தரப்பட்ட பதிமூன்றாவது திருத்தத்தை இடைக்கால தீர்வாகவாவது ஏற்றுக்கொண்டுள்ளார்கள். கடந்த ஐந்து ஆண்டு காலத்தில், பல்வேறு காலகட்டத்தில் பதிமூன்றை எதிர்த்த பிரகஸ்பதிகள்கூட, ஒரு கட்டத்தில் ஒருமித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதினார்கள்.

இதில் பிரச்சினையே பதிமூன்று குறித்த அவர்களின் அணி மாறும் அரசியல்தான். இன்று ஒரு சொல் கூறும் அவர்கள், அதனில் நிலைத்து நிற்பார்கள் என்று எந்தவித உறுதிப்பாடும் இல்லாதவர்கள். அவர்களை நம்பி இந்தியா மீண்டும், மீண்டும் களத்தில் இறங்கினால், மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கிய கதைதான்.

காரணம், அவர்களுக்குத் தேவை பிரச்சினைக்கான தீர்வு அல்ல. அந்த தீர்வை முன் வைத்து பிரச்சினையை எவ்வாறெல்லாம் உயிர்ப்பிப்பது என்பதுதான் அவர்களது கவலை. ஏன், பதிமூன்றுக்கு ஆதரவாக அவர்கள் குரல் கொடுக்கும் போதெல்லாம், அவர்களது மனதில் ஓடுவது இனப்பிரச்சினைக்கான தீர்வு அல்ல. அதனை வைத்து எவ்வாறு, தமிழர் அரசியலில் குடடையை குழப்புவது என்பதுதான்.

இவர்கள் அனைவரையும் பொறுத்தவரை, இந்தியா அவர்களுடைய விளையாட்டு பாவையாக தொடர வேண்டும். அவர்கள் இந்தியாவை கிள்ளுகீரையாகப் பாவிப்பார்கள். ஊறுகாய் போல், தங்களுக்கு வேண்டியபோது, வேண்டிய அளவில் தொட்டுக்கொள்வார்கள். மீதி நேரத்தில், தூக்கி எறிவார்கள். இதுதானே தசாப்தங்களாக நிகழ்ந்து வரும் உண்மை?

### தார்மீக ஆதரவுக்கு அப்பால்

கடந்த 1983 இனப்படுகொலையைத் தொடர்ந்து, இந்தியா இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமை குறித்து அக்கறை எடுக்கத் தொடங்கியது. அத்துடன் அந்த உரிமைகளை பாதுகாத்துக்கொள்ளவும் தங்களின் உயிரையும் உடமையையும் பாதுகாத்துக் கொள்ளவும்தான், முன்னரே இங்கு முளைத்திருந்த போராளி குழுக்களுக்கு தார்மீக ஆதரவுக்கும

(6ஆம் பக்கம் பார்க்க..)

# மன்னார் நானாட்டானில் நடந்தது மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு






மன்னார் நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவணி புதன்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு நடைபவணி ஆனது நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நானாட்டான் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து இன்று காலை 9.30 மணியளவில் முருங்கன் வீதியில் ஆரம்பிக்கப்பட்டு நானாட்டான் சுற்று வட்டத்தின் வழியாக நானாட்டான் பிரதேச செயலகத்தை சென்றடைந்தது.

இந்த நிகழ்வில் மன்னார் பிரதி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஒஸ்மான் டெனி , நானாட்டான் மடு சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் ,நானாட்டான் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், நானாட்டான் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள

.(05)






காலைக்கதிர் Kalaikkathir

# கர்வம், கௌரவம் .......

அப்பால் சென்று உதவிகளைச் செய்தது.

அன்றைய இந்தியாவைப் பொறுத்தவரை, அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, மிதவாத அரசியல்வாதிகளை முன்னிறுத்தி இலங்கை அரசுடன் பேச்சு நடத்தியது. அவ்வாறு பெற்றுக்கொடுக்கப்படும் உரிமைகளை பாதுகாத்துக்கொள்ள போராளி குழுக்களைத் தயார்ப்படுத்தியது.

அதாவது, இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில், மலையக தமிழர்களை நாட்டைவிட்டே துரத்த நடந்த முன்னெடுப்புகளை தடுத்து நிறுத்தும் நிலையில் அன்றைய இந்தியா இருக்கவில்லை. என்றாலும், இந்தியா – –பாகிஸ்தான் பிரிவினை கால பிரச்சினைகள் ஓரளவு குறைந்த பின்னர், சுதாரித்துக்கொண்டு, புது டெல்லி, மலையக தமிழர்களுக்கான உரிமைகளை நிலைநிறுத்த ஆவன செய்ய முயன்று, அதில் ஓரளவு வெற்றியும் பெற்றது.

அதன் தொடர்ச்சியாகவே, இந்தியா கண்ணடைத்திருப்பதாக நினைத்துக்கொண்டு, இலங்கை தமிழ் இனத்தையும், தென்னிலங்கை சிங்கள பேரினவாதிகள் நாட்டை விட்டே துரத்தி அடிப்பதற்கான முழு முதல் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோது, புதுடெல்லி இனப்படுகொலைக்கு எதிராக குரல் எழுப்பியது. இந்தியாவைப் பொறுத்தவரையில், இடைக்காலத்தில், இன்றைய வங்காள தேசத்தில் அரங்கேறிய இனப்படுகொலையும் அதன் மனத்தில் ஆழமான வடுக்களை தோற்றுவித்திருந்தது.

ஆனால், நடத்தது என்ன? இங்கு அரசியல் செய்து கொண்டிருந்த மிதவாதிகளிடமிருந்து அதிகாரத்தையும் மக்கள் ஆதரவையும் தட்டிப்பறிக்கும் இரத்தவெறி பிடித்த ஒரு எதேச்சாதிகார, சர்வாதிகார தனி மனிதனை இந்தியா நினைத்தும்கூட பார்த்திருக்கவில்லை. அன்றைய இந்தியாவை பொறுத்தவரையில், ஒவ்வொரு தமிழனும் இலங்கை பேரினவாதிகளிடம் இருந்து பாதுகாக்கப்பட வேண்டியவரே.

தனது தவறை திருத்திக்கொண்டு, விடுதலை புலிகள் அமைப்பின் உண்மையான சொரூபத்தை அறிந்து ஏற்றுக்கொள்ள இந்தியாவிற்கும் காலம் தேவைப்பட்டது. இடைப்பட்ட காலத்தில், செயலளவில் சாத்தியமான பதிமூன்றாவது தீர்வுத் திட்டத்துடன் தொடங்குவதும், காலப்போக்கில் அதில் தேவையான மாற்றத்தைச் செய்துகொள்வதற்குத் தமிழ் பேசும் இனத்தவர்கள் ஒன்று சேர்ந்து இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுப்பதும்தானே இந்தியாவின் உத்தியாக இருந்தது.

இந்தியா அளித்த தீர்வுத் திட்டமும் அது சார்ந்த உத்தியும் செயல்படுத்தப்பட கூடிய ஒன்றுதான். காரணம், அன்றைய சூழலில் மொத்தமுள்ள 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஐம்பதுக்கும் மேலானோர், தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள். அதில் ஆளும் ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்குவர். இன்றைய நிலைமையும் கிட்டத்தட்ட அப்படிதான் இருக்கிறது.

ஆனால், இந்தியா கருதி இராத விடயம் ஒன்று இருந்தது. தமிழ் மக்களின் தலைகனத்தையும், தமிழ் தலைமைகளின் சுயநல அரசியலையும் இந்தியா சரியாக கணக்கிடத் தவறியது. அதுபோன்றே, இலங்கை தமிழர்கள், மலையகத்தார் மற்றும் முஸ்லீம் இன அரசியல் தலைவர்களின் தன்னார்வ அரசியலையும் அது அறிந்திருக்கவில்லை அதற்கான விலையாக ராஜீவ் காந்தியின் உயிரையும் இந்தியா கொடுத்தது.

அந்த சுயநல அரசியலின் உச்சக்கட்டம்தான், பிரபாகரன் என்ற தனி மனிதனை தமிழ் மக்களில் சிலராவது இன்றளவும் தங்களது காவல் தெய்வமாகக் கருதுவது. அந்த அளவிற்கு மூளைச் சலவை செய்யப்பட்ட மக்கள்தான், தங்களை உலகிலேயே மிகப்பெரிய அறிவாளிகள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிறார்கள்.

### ஊழலற்ற வேட்பாளர்கள்

தற்போது, நாடாளுமன்ற தேர்தல் குறித்து கருத்து கூறிவரும் சமூக ஆர்வலர்கள், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் ஊழலற்ற தலைவர்களையே மக்கள் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று கருத்து தெரிவித்து வருகின்றனர். இவர்களில் மன்னார் கத்தோலிக்க ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையும், யாழ்பாண பல்கலைகழக மாணவர் ஒன்றிய பொறுப்பாளர்களும் அடங்குவர். இருக்கவே இருக்கிறார்கள், தவறான தூண்டுதலால் பொதுவேட்பாளரை களமிறக்கி கையைச் சுட்டுக்கொண்ட தன்னார்வல நிறுவனங்களின் தனிப்பட்ட அமைப்பாளர்கள்.

ஆனால், யாருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்ற தெளிவான கருத்து எதனையும் இந்தத் தரப்பினர் கூறவில்லை. இவர்கள் முன்வைக்கும் அரசியல் பண்புகள் யாரை எல்லாம் மனதில் வைத்து கூறப்பட்டது என்பது அவர்களுக்கே வெளிச்சம். ஆனால், யாரெல்லாம் இந்த அடைமொழிக்குள் வரமாட்டார்கள் என்பது தெளிவு.

இவர்களில் குறிப்பாக மன்னார் ஆயர் குறிப்பிட்ட ஊழலற்ற தலைவர்கள் என்ற அடைமொழிக்கு உரிமையாளர்கள் என்று பலர் இருக்கமாட்டார்கள். இந்த பின்னணியில், பட்டியல் மற்றும் விருப்பு வாக்குகள் அடிப்படையில் நடத்தப்படும் தேர்தலில், எத்தனை வேட்பாளர்கள் தேறுவார்கள் என்பதே கேள்விகுறி.

### இலவச இணைப்பு

அது எவ்வாறாயினும், இந்த தரப்பினர் கூறும் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகள் மற்றும் அபிலாஷைகள் எத்தகைய வரம்புகளுக்குள் நிலைநிறுத்தப்படவேண்டும் என்ற கேள்வி எழுகிறது. பதிமூன்று உள்ளிட்ட தயாராக இருக்கும் தீர்வுகள் ஒருபுறம் இருக்க, சமஷ்டி என்ற இலக்கினை நோக்கி அவர்கள் இன்னமும் பயணிக்கிறார்கள். ஆனால், அது எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது.

பதிமூன்று ஆகட்டும், அல்லது சமஷ்டி ஆகட்டும் அல்லது அதற்கு அப்பாலும் ஆகட்டும், தமிழ் தரப்பினரில் பெரும்பாலானோர், அதனை தங்களுக்கு அண்டை நாடான இந்தியாவே பெற்றுத்தர வேண்டும் என்று அவ்வப்போது குரல் எழுப்பி வருகிறார்கள். ஆனால், அவர்களே தான் இந்தியா மற்றும் சர்வதேசம் என்ற ஓர் அடைமொழியையும் இடையிடையே இணைத்துக் கொள்கிறார்கள். இதில், சர்வதேசம் என்பது, குறிப்பாக இந்தியாவுக்கு எதிரான புலம்பெயர்ந்தோரின் இலவச இணைப்பு என்றே கருத வேண்டும்.

குறிப்பாக இந்தத் தரப்பினர், உள்நாட்டில் கள நிலைமையை ஏற்றுக்கொள்ளாமல் செய்யும் அழிச்சாட்டியங்களே, இன்றளவும் இனப்பிரச்சினைக்கு தீர்வு இல்லாமலானதற்கான காரணங்களில் ஒன்று. விடுதலை புலிகள்க அமைப்பு காலம் துவங்கி, கையில் வெண்ணெய் கிடைக்கும் போதும், நெய்க்கு அலைந்த கதையாக, இந்தியாவை குறைகூறி அதில் குளிர் காய்வது தானே தமிழ் அரசியல் தலைவர்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை. அது தானே இப்போதும் அரங்கேறுகிறது!




## வீட்டில் உறங்கியபடியிருந்த சிறுமியின் தங்க சங்கிலியைத் திருடிய நபர் கைது

களுத்துறை வடக்கு, வஸ்கடுவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் நுழைந்து கட்டிலில் உறங்கிக்கொண்டிருந்த ஒன்றரை வயது சிறுமியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைத் திருடிச் சென்றதாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

திருடப்பட்டதாக கூறப்படும் தங்கச் சங்கிலியின் பெறுமதி 119,000 ஷரூபா ஆகும்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

சம்பவத்தன்று சிறுமியின் பெற்றோர் வேலைக்குச் சென்றுள்ள நிலையில் சிறுமியும் சிறுமியின் பாட்டியும் வீட்டில் தனிமையிலிருந்துள்ளனர்.

இதன்போது, சிறுமியின் பாட்டி துணிகளைத் துவைத்து விட்டு அதனைக் காய வைப்பதற்காக வீட்டிற்கு வெளியே சென்றுள்ளார்.

சிறுமியின் பாட்டி வீட்டில் இல்லாததை அவதானித்த சந்தேக நபர், வீட்டிற்குள் நுழைந்து கட்டிலில் உறங்கிக்கொண்டிருந்த சிறுமியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைத் திருடி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இனங்காணாத நபரொருவர் வீட்டிலிருந்து வெளியே செல்வதைக் கண்ட பாட்டி உடனடியாக வீட்டிற்குள் சென்று பார்த்த போது சிறுமி அலறிக்கொண்டிருப்பதை அவதானித்துள்ளார்.

பின்னர், சிறுமியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி காணாமல் போயுள்ளதை அவதானித்த பாட்டி இது தொடர்பில் சிறுமியின் பெற்றோருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

## எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

### அனுராதபுரம் மாவட்டத்தில்

அனுராதபுரம் மாவட்டத்தில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பாலின நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் அஜித் கரவிட்ட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் அனுராதபுரம் மாவட்டத்தில் மாத்திரம் 17 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தாயின் மூலம் எய்ட்ஸ் நோய் பரவியதாக கூறப்படும் 5 குழந்தைகள் அனுராதபுரம் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்நிலையில், 15 முதல் 24 வயதுக்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளும், 25 முதல் 49 வயதுக்குப்பட்டவர்களுமே எய்ட்ஸ் நோயால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(

05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஐக்கிய மக்கள் சக்தி ஆரவுடன் செயற்படுவதற்கு ஜனாதிபதிக்கு அநுரவிற்கு எந்தத் தடையுமில்லை

## ஐ.ம.ச. தவிசாளர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவிப்பு

நாடாளுமன்றத்தில் எமக்கு பெரும்பான்மை பலத்தை மக்கள் வழங்கினால் சமூக ஜனநாயக வேலைத்திட்டத்தைக் கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு ஜனாதிபதிக்கு எந்தத் தடையும் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமையகத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நமது நாட்டின் சம்பிரதாய அரசியல் நடத்தை மற்றும் அரசியல் முறைகளுக்கு மக்கள் தங்கள் எதிர்ப்பையும், விரக்தியையும், அவநம்பிக்கையையும் கடந்த தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால், இன்னும் நமது அரசியல் தலைவர்கள் அதிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளவில்லை.

ஜனாதிபதி தேர்தல் முடிந்து இரண்டு, மூன்று நாளக்களுக்குள் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னெப்போதும் இல்லாத வகையில், இரண்டு, மூன்று நாளகளுக்குள் தேர்தலை அறிவித்து உடனடியாக எழுந்த அலையை பாவித்து தந்திரோபாயமாக ஆதாயம் தேடும் முயற்சியை பார்க்கிறோம்.

2019 ஆம் ஆண்டிலும், இவ்வகையான அரசியல் நடத்தை மூலம் உருவாக்கப்பட்ட அலைகளுக்கு பலியாகியதால் ஏற்பட்ட விளைவுகளையும் பேரழிவுகளையும் நாங்கள் கண்டோம்.

மீண்டும் இதுபோன்ற அலைகளுக்கு இரையாகி அதன் விளைவுகளைச் சந்திக்க வேண்டுமா? அல்லது இத்தேர்தலில் இந்த பாரம்பரிய அரசியல் நடத்தையில் இருந்து மாறி புத்திசாலித்தனமாகவும் விமர்சன ரீதியாகவும் செயற்படுவதா என்பதை எமது மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

வரலாற்றின் படிப்பினைகளைக் கற்று, ஆட்சியில் அதிகாரங்களுக்கிடையிலான தடைகள் மற்றும் சமநிலையை உருவாக்கும் முடிவை எடுக்க வேண்டும்.

சம்பிரதாய அரசியல் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். நியமிக்கப்பட்ட ஜனாதிபதியும், நடைமுறை ரீதியான வேலைத்திட்டத்துடனும், ஆயத்தங்களுடனும் வெற்றிகரமான உலக நாடுகள் சென்ற வழியில் நாட்டை வழிப்படுத்தக் கூடிய அனுபவமும் திறமையும் வாய்ந்த குழுவைக் கொண்டமைந்த அதிகாரங்களுக்கிடையே தடைகள் மற்றும் சமநிலையை ஏற்படுத்தும் அரசாங்கத்தை அமைப்பது நாட்டுக்கு நல்லது.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது எம்மால் செய்ய முடியுமானதை சொல்லும், சொன்னதைச் செய்ய முடியுமான அரசியல் இயக்கமாகும். ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு உள்ளிட்ட உலக நாடுகளுடன் சிறந்த முறையில் தொடர்புகளை பேண முடியுமான அனுபவம் வாய்ந்த குழு எங்களிடம் உள்ளது.

உலக வங்கியின் கூற்றுப் படி, வறுமை விகிதம் 25.9 வீதமாகும். உலக வங்கியின் 2023 அறிக்கையின்படி, எமது நாட்டில் 61.1வீத மக்கள் தங்கள் உணவு வேளையை குறைத்துள்ளனர் என சுட்டிக்காட்டுகிறது.

எமது நாட்டில் 50வீதத்துக்கும் அதிகமான மக்கள் வறுமையில் விழும் அபாயத்தில் உள்ளனர். இந்த விபரங்கள் அனைத்தும் 2023 ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் வெளிப்படுத்தல்கள் ஆகும்.



ஆகவே இம்மக்கள் குறித்து முன்னுரிமை வழங்கி செயற்படுவது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். சமூக நீதி மற்றும் வறுமை ஒழிப்பை இலக்காகக் கொண்ட சமூக ஜனநாயக வேலைத்திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி மக்களிடம் முன்வைத்துள்ளது.

எமது கொள்கைகளை ஏற்று, எமது அணியை ஏற்று, அதன் மூலம் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என நம்புகின்ற அனைவருக்கும் இரண்டு வேண்டுகோள்களை விடுக்கிறேன்.

முதலாவதாக, நவம்பர் 14 ஆம் திகதி முன்னதாகவே சென்று வாக்களியுங்கள். ஜனாதிபதித் தேர்தலின் பின்னடைவைக் கண்டு தயங்காமல் வாக்கைப் பயன்படுத்துங்கள்.

இரண்டாவதாக, ஊடகங்களில் எமக்கான இடம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள பின்னணியில், எம்மை நம்பி வாக்களிக்காத, எம்மை நம்பாத புதிய வாக்காளர்களுக்கு, மாற்று அரசியல் கட்சிகளை நம்பியுள்ள மக்களுக்கு, எந்தத் தரப்பினரையும் நம்பாமல் வாக்களிக்கச் செல்லாமல் இருப்போருக்கு, எங்கள் திட்டத்தை எடுத்துச் சொல்லி, அவர்களை நம்ப வைக்க இந்த சில நாட்களில் வேலை செய்ய வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

சமூக ஜனநாயக வேலைத் திட்டத்தைக் கொண்ட பலம்பொருந்திய ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் இந்த நாட்டில் அதிகாரங்களுக்கிடையே சமநிலை பேணும் அரசாங்கத்தை உருவாக்கி நாட்டை அபிவிருத்தியின் பால் இட்டுச் செல்ல உங்கள் பங்களிப்பை எமக்கு வழங்குங்கள்.

உலகம் இன்று மாறிவிட்டது. சீனா, வியட்நாம் மாறிவிட்டன. எனவே, சமூக ஜனநாயக வேலைத்திட்டத்தைக் கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் தற்போதைய ஜனாதிபதி இணைந்து செயற்படுவதற்கு எந்தத் தடையும் இல்லை. - என்றார்.(05)



# இரண்டு துப்பாக்கிகளுடன் புத்தளத்தில் ஒருவர் கைது

புத்தளம் - குருணாகல் வீதியில் கொட்டுகச்சி பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இரண்டு துப்பாக்கிகளுடன் சந்தேக நபரொருவர் புதன்கிழமை பிற்பகல் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (05)

# மாத்தறை துப்பாக்கிச் சூடு உதவியாளர் ஒருவர் கைது

மாத்தறை, ருவன்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவி செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் கெஸ்பேவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கெஸ்பேவ பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கார் , வான் மற்றும் துப்பாக்கி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மாத்தறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மாத்தறை, நாவிமன, ருவன்வெல்ல பிரதேசத்திற்குக் கடந்த 15ஆம் திகதி காரில் வந்த இனங்காணாத நபர்கள் சிலர் ஓட்டோவில் இருந்த நபர் ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டுக் காலை செய்துவிட்டு அங்கிருந்த தப்பிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)






## பசறை - டெமேரியாவில்

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஆறு தொழிலாளர்கள் பாதிப்பு

*பசறை - டெமேரியா தேயிலைத் தோட்டத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி ஆறு தோட்டத் தொழிலாளர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*இந்த சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.*

*குளவி கொட்டுக்கு இலக்காகிய தோட்டத் தொழிலாளர்கள் பசறை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.*

*40,46 , 57 மற்றும் 64 வயதுடைய நான்கு பெண்களும் 46 மற்றும் 55 வயதுடைய இரண்டு ஆண்களுமே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.*

*(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

## உயிர்த்த...

மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கைகள் ஜனாதிபதித் தேர்தலின்போது எனக்குக் கிடைத்தன. ஆனால் இந்த சம்பவத்தை அரசியலுடன் இணைக்கத் தயங்கியதால் அவற்றை நான் பகிரங்கப்படுத்தவில்லை.

இலங்கையின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக நான் பதவியேற்ற பின்னர் கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் அருட்தந்தை ஹறோல்ட் அந்தோனி பெர்னாண்டோவின் வேண்டுகோளுக்கு இணங்க உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகளை அவரிடம் கையளித்தேன்.

அதன் பின்னர், கத்தோலிக்க ஆயர்கள் பேரவை அந்த அறிக்கை குறித்துப் பல சந்தேகங்களை எழுப்பியிருந்ததுடன் தெளிவுபடுத்தல்களையும் முன்வைத்திருந்தது. எனக்கு அனுப்பப்பட்ட அனைத்து விளக்கங்களையும் சட்டமா அதிபருக்கு அனுப்பி, அது தொடர்பான அனைத்து விடயங்களையும் ஆயர்கள் பேரவையுடன் பரிமாறிக்கொள்ளுமாறு அறிவுறுத்தினேன்.

சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஆராயுமாறும் என்னிடம் கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன. நான் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி எஸ்.ஐ. இமாம், முன்னாள் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி மற்றும் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஹர்ஷ ஷோசா ஆகியோர் மூவரடங்கிய குழு ஒன்றை விசாரணைக்காக நியமித்தேன்.

கூடுதலாக, ஏ.எம்.ஜே. டி அல்விஸ், டபிள்யூ.எம்.ஏ.என்.நிஷான் மற்றும் கே.என்.கே. சோமரத்ன ஆகியோரைக் கொண்ட மற்றுமொரு மூவர்குழுவையும் நியமித்தேன். இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டவர்கள் யாரையும் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியாது. இந்த குழுக்களுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆதரவை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மேற்கூறிய குழுவை நியமித்ததன் நோக்கங்களில் ஒன்று, இந்திய உளவுத் துறையிடமிருந்த எந்தவகையான பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்த தகவல் கிடைத்தாலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வது. மேலும், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானதாக உள்ளதா என்று விசாரிப்பதுமாகும். இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள மற்றொரு பொறுப்பு. வவுணதீவில் பொலிஸார் இருவர் கொல்லப்பட்டது தொடர்பாக ஆராய்வது. இந்தக் கொலைகளுக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு என அரச புலனாய்வுப் பிரிவினரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் தெரிவித்தனர். நான்கு மாதங்களாக அவ்வாறு அறிவித்தது ஏன்? அப்போது அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன எனப்து குறித்துக் கேள்வி எழுப்புவதும் இந்தக் குழுவின் நோக்கம்.

அல்விஸ் குழு அறிக்கையானது அப்போதைய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரும் தற்போதைய பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான ரவி செனவிரத்ன, குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர ஆகியோரை பழிவாங்குவதற்காக தயாரிக்கப்பட்ட அறிக்கையல்ல.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நந்தன முனசிங்க, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் பதிநாயக்க, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அப்துல்கலாம் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகள் தொடர்பிலும் அந்த அறிக்கையில் பரிந்துரைகள் உள்ளன. சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன மீது ஈஸ்டர் சம்பவம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மேலதிகமாக முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் தற்போதைய பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, இது ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகியோருக்கு எதிரான இட்டுக்கட்டப்பட்ட அறிக்கை என்ற விளக்கம் அடிப்படையற்றது என்பது மிகவும் தெளிவாகும்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வவுணதீவுப் பொலிஸ் கொலைகள் தொடர்பிலான அவதானிப்புகளும் மிக முக்கியமானவை. அந்தச் சம்பவத்தோடு தொடர்புபட்டவர்கள் விடுதலைப் புலிகளே என்று முதலில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து தம்பிராச குமார் மற்றும் இராசநாயகம் சர்வானந்தன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அறிக்கையின் இணைப்புகளை ஆய்வு செய்யும்போது, பல முரண்பாடான உண்மைகள் வெளிவருகின்றன. இந்தக் கொலைகளின் பின்னணியில் அப்போது சிறையில் இருந்த பிள்ளையான் என்கிற சிவனேசதுரை சந்திரகாந்த் இருந்ததாக புலனாய்வு அமைப்புகளின் அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. வவுணதீவில் உயிரிழந்த கணேஷ் என்ற பொலிஸ் அலுவலருடன் தொடர்பு வைத்திருந்தார் எனக் கூறப்படும் பெண்ணின் கணவராலேயே அவர் கொல்லப்பட்டார் என்று மற்றுமொரு புலனாய்வு முகவர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய தௌஹீத் ஜமாத்தின் (வேது) செயற்பாடுகளை புலனாய்வு அமைப்புக்கள் கண்டுபிடிக்க நான்கு மாதங்கள் ஆனதற்கு தேசிய புலனாய்வு அமைப்புகளிடம் தகவல்களைப் பெறுவதற்கான முறையான வலையமைப்பு இல்லாததே காரணம் என இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் (னுஆஐ) தெரிவித்துள்ளார்.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புக் (பக்கம் எண் 12) குறித்து வெளிநாட்டு உளவுத்துறையான இருந்த இந்திய உளவுத்துறை வலுவான தகவலைக் கொண்டிருந்தது. இந்தப் பகுதியில் அது வலுவான தகவல் வலையமைப்பைக் கொண்டிருந்தாலும், இலங்கை உளவுத்துறையின் செயல்பாட்டில் கடுமையான சரிவைக் காணலாம். அதே பகுதியில் பலமான உளவுத்துறை வலையமைப்பு நம்மிடம் இல்லாதிருந்தது துரதிர்ஷ்டவசமானது. ஏனெனில் இது நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இந்த விடயத்திலேயே எனது கவனம் செலுத்தப்பட்டது.

ஆயர்கள் பேரவையின் பதிலைப் பெற்று, உளவுத்துறையின் சரிவு மற்றும் ஈஸ்டர் தாக்குதல் குறித்து அறிக்கையுடன் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பதே எனது நோக்கமாக இருந்தது. ஏனெனில் தேசிய புலனாய்வு சேவையின் வீழ்ச்சி நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலானது. எனவே அதனை உடனடியாக மறுசீரமைக்கவேண்டும். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்து அதன் அறிக்கைப்படி மூத்த அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் அடங்கிய மூவர் கொண்ட குழுவின் ஊடாக உளவுத்துறை அமைப்புகளை முழுமையாக மறுசீரமைக்க முன்மொழிவதற்கும் நான் உத்தேசித்திருந்தேன்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணை அறிக்கையில் தேசிய புலனாய்வுச் சேவையின் கடுமையான சரிவு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இந்த அறிக்கை, கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது எனது கைக்கு வந்த போதிலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அரசியலுடன் இணைக்க நான் தயக்கம் காட்டியதால், அந்த அறிக்கைகளை நான் பகிரங்கப்படுத்தவில்லை.

என்னைப் பற்றி கர்தினால் கூறிய அனைத்து அறிக்கைகளும் ஆதாரமற்றவை. உயிர்த்த ஞாயிறு அறிக்கைகள் குறித்து ஆயர்கள் மாநாடு அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடவேண்டும். மேற்கூறிய அனைத்தையும் கருத்தில் கொண்டு, உயிர்த்த ஞாயிறு அறிக்கையை அரசியலாக்க வேண்டாம் என்று அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

## குடித்தொகை...

மக்கள் தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் திருமதி செனவிரத்ன இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீட்டுக்கு வரும் மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு அச்சமின்றி சரியான தகவல்களை வழங்குமாறு மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம். திணைக்களத்தில் இருந்து வெளியார் எவருக்கும் அந்தத் தகவல்கள் செல்லாது என உறுதியளிக்க முடியும்.

இந்த ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூன்றாம் கட்டமாக தனிநபர்கள் மற்றும் வீடுகள் குறித்த தகவல் சேகரிப்பு தற்போது நடைபெற்று வருகின்றது, அந்த தகவலை சரிபார்க்கும் இறுதிக்கட்டமான 'மக்கள் தொகை கணக்கெடுப்பு தினம்' டிசெம்பர் 19 தொடங்கி 5 நாட்களுக்கு நடைபெறும். மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக பொது இடங்களில் இறுதித் தகவல் சேகரிப்பு டிசெம்பர் 18 இரவு மேற்கொள்ளப்படவுள்ளது. சமூக, பொருளாதார மற்றும் விஞ்ஞானத் தகவல்களும் இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் அடிப்படைத் தகவல்களுடன் சேகரிக்கப்படும். இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கணினி முறையில் இந்த சனத்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படுகின்றது, இதுவரை சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி 8,377,895 சனத்தொகை அலகுகளும் 6,762,644 வீடுகளும் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 3 கைத்....

தகவலையடுத்து இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 64 வயதுடைய பிரதான சந்தேகநபர் ஒரு பொற்கொல்லர் என்பதுடன், தங்க நகைகளை உற்பத்தி செய்யும் போர்வையில் அவர் இந்த துப்பாக்கிகளைத் தயாரித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் அவரிடமிருந்து துப்பாக்கிகளை வாங்கிய இருவர் அடங்குகின்றனர என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். பிரதான சந்தேக நபரிடம் தலா நாற்பதாயிரம் ரூபாவை கொடுத்து துப்பாக்கிகளை கொள்வனவு செய்ய முடியும் என்று மிதிகம மற்றும் தோட்டமுனை பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

## இஸ்ரேலியர்கள்...

அரசும் அறிவித்ததை அடுத்து, இந்த இஸ்ரேலியர்கள் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் பாதுகாப்பாக வெளியேற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த இஸ்ரேலிய பிரஜைகள் குழு இன்று அதிகாலை 03.03 மணியளவில் பிளை டுபாய் விமானத்தில் புறப்பட்டனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இஸ்ரேலுக்கு திட்டமிடப்பட்ட விமானங்கள் இல்லாததால், இந்த இஸ்ரேலியர்கள் குழு துபாய் சென்று அங்கிருந்து இஸ்ரேலின் டெல் அவிவ் அல்லது ஜெருசலேம் விமான நிலையத்திற்கு புறப்படும்.






# பெரியபுராணம்

பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ என்று பாராட்டும் படியாக காப்பியம் இயற்றியவர் சேக்கிழார் பெருமான். பெரிய புராணத்துள் பக்திச் சுவையுடன் பல்வேறு செய்திக்கூறுகளும் இழையோடக் காணமுடிகின்றது. காப்பியத்துள் தமிழ்ப்பற்று,வரலாற்று உண்மைகள் இல்லறக் கருத்துக்கள், வாழ்வியல் கூறுகள் இலக்கிய நயம் எனக் காப்பியம் முழுமையும் ஒரு கலைப் பெட்டகமாகவே விளங்குகின்றது. அவரது நோக்கம் பக்தியை மேம்படுத்தல் என்றாலும், கூர்ந்து நோக்கினால் பிற கருத்துக்களையும் அதனுள் காணமுடிகின்றது. மேலும் தெய்வச் சேக்கிழரால் படைக்கப்பட்ட ஒப்பற்ற கருவூலம் பெரியபுராணம். இறைவனே அடி எடுத்துக்கொடுத்து தோன்றாத்துணையாக இருந்து உள்ளிருந்து உணர்த்த சேக்கிழரால் பாடப்பட்ட நூல் சிவபெருமானையும் அவரைப் பூசிக்கும் முறைகளையும் அதனால் ஏற்படும் பயன்களையும் தொண்டின் சிறப்பையும் அடியார்களின் பெருமைகளையும் விரித்துக்கூறும் ஞானப் பெட்டகமே பெரியபுராணம்.

நாட்டில் ஏற்பட்ட வறுமை, பஞசம் நீதிமன்ற நடவடிக்கைகள், ஆட்சி, காட்சி என்ற அடிப்படையில் நீதி வழங்கியமை, சைவர்கள் நடத்திய திருமணமுறைகள் பற்றிய குறிப்புகளைத் தருகின்றது பெரியபுராணம். பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் பெரியபுராணம் குறித்துக் கூறும்போது "அறுபத்து மூவர் வரலாற்றையே கூறும் நூல் என்றாலும் அவர்தம் சரிதம், தமிழகச் சமுதாய வரலாறு ஆகியவற்றுடன் தமிழ்நாட்டு வரலாறு என மூன்றையும் குறிப்பிட்ட அளவில் கலந்து படைக்கப்பட்டது" எனக் குறிப்பிட்டுள்ளார். அது சேக்கிழார் பெருமானின் புலமைத் திறத்தைக் காட்டுகின்றது. பெரிய புராணம் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்தாலும் அதனுள் பௌராணிகத்தையும் காணலாம்.

பெரிய புராணம் வரலாற்றுக் குறிப்புகள் மிகுந்த வரலாற்று நூல் எனினும் மிகை இல்லை. என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ்ச்செய்யுமாறே என்று சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த திருமூலர் கூறுவார். மனிதனைக் கடவுள் படைத்ததன் நோக்கமே அவனைத் தெரிந்து அறிந்து தமிழில் புகழ்ந்து இலக்கிய சுவையோடு போற்ற வேண்டும் என்பதுதான். பண்டைக்காலத் தமிழர்கள் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டனர். காலம் செல்லச் செல்ல தமிழ் மொழியையும் இறைமையையும் ஒன்றாகவே கருதி பல இலக்கியங்களைத் தெய்வீக உணர்வோடு பலரும் இயற்றினர். அறிதல், உணர்தல், செய்தல் ஆகிய இம்மூன்றும் சேர்ந்ததுதான் 'மனம்' என்றும் அறிதல் இயற்றமிழிலும், உணர்தல் இசைத் தமிழிலும், செய்தல் நாடகத் தமிழிலும் அடங்கும் என்றும், எனவே முத்தமிழ் இயல்பாகவே மனச்செம்மைக்கு வழிவகுக்கும் என்றும் தமிழர்கள் வாழ்வில் கொண்டு வாழ்ந்து வந்தனர்.

எந்தப் பொருளை யார் சொல்லக் கேட்டாலும் அந்தபபொருளின் உண்மையை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதனை 'எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். உண்மையான அறிவையே திருவள்ளுவர் மெய்ப்பொருள் என்கிறார். இவ் மெய்யுணர்வை சேக்கிழாரும் தனது பெரியபுராணத்தில் கூறுகின்றார். மேலும் பெரியபுராணத்தில் இசை பற்றிக் கூறவும் தவறவில்லை.

இசை பற்றிய அரிய செய்திகளை பெரிய புராணம் தன்னகத்தே கொண்டுள்ளது. 'இசை விளங்கிட இயல்பினில் பாடி நின்றேத்தி' என்று சேக்கிழார் கூறுகிறார். இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். பெரியபுராணம் கூறும் வாழ்வியல் நெறிகளுக்கு சிறந்த ஒரு உதாரணமாக, மக்கள் அன்புடனும், ஒழுக்கமுடனும், பணிவுடனும், பக்தியுடனும் வாழ வேண்டும், மனித வாழ்வு நிலையானதல்ல என்ற உணர்வும் வேண்டும் என்கிறார். இவை எல்லா நாயன்மார்கள் வாழ்விலும் காணக்கூடிய நீதிகள்.

உயிர்கள் நேயம் வேண்டும் என்பதை (121,1223,1228) என்ற பாடல்களிலும் ஆழ்பவர்களின் கடமைகள் (121)தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் (216) போன்ற பாடல்களிலும் காணலாம். இவற்றின் மூலம் பெரியபுராணம் கூறும் வாழ்வியல் நெறிகளைத் தெரிந்துகொள்ளலாம். பெரிய புராணம் மகளிர் பற்றிக்கூறவும் தவறவில்லை என்றே கூறவேண்டும். அதாவது சேக்கிழார் படைத்துக்காட்டும் மங்கையர் திலகங்கள் 'பெண்ணிற் பெருந்தக்கயாவுள'என்ற வினாவுக்கு விளக்கம் கூற வந்த பாத்திரங்களாவார். ஆடவர் தடம் புரண்டாலும் மங்கையம் தடம் புரளாது நெறியில் நின்று ஒழுகி வாய்மை வரலாற்றை வயம்படுத்தியிருக்கிறார்கள்

ஆன்மீகத்துறையில் ஈடுபட பெண்களுக்கு உரிமையில்லை என்ற அக்கால நிலையை மாற்றுகிறார் சேக்கிழார். அடுப்பூதும் மங்கை ஆண்டவனைப்பாடி அவன் அருளில் கலந்த செய்தியைக் கூறுகின்றார்.

காரைக்கால் அம்மையார் தலையால் நடந்து கைலாயம் சென்றபோது இறைவன் 'அம்மையே' என்று அவரை அழைத்ததாகக் கூறும் சேக்கிழார் பெண்குலத்தையே பெருமைப்படுத்துகின்றார்.

இயற்பகை நாயனார் மனைவியை மெய்த்தவர் (இறைவன்) கேட்டவாறே கொடுத்தனன் என்று கூறிய போது அம்மையார் கலங்கி மனந்தெளிந்து பின் 'நீர் உரைத்தது ஒன்றை நான் செயும் அத்தனையல்லால் உரிமை வேறுளதோ எனக்கு' என்று கூறி வணங்கினாள் என்றும் அவளைத் 'திருவினும் பெரியாள்' என்றும் குறிப்பிட்டு இலக்குமியை விடப் பெரியவள் என அவள் கற்புத்திறனை சேக்கிழார் விளக்குகிறார். அத்துடன் இல்லறத்தின் சிறப்பினையும் அழகாக எடுத்துக் கூறுகிறார். 'வையகம் போற்றும் செய்கை மனை அறம்புரிந்து வாழ்வோர்' என்று திருநீலகண்டர் வரலாற்றில் விளக்குகின்றார். மேலும் சுந்தரர் இயற்றிய திருத்தொண்டர் தொகையாய் அரும்பி நம்பியாண்ட நம்பிகள் இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியாய் மலர்ந்து பின்னர் சேக்கிழரால் திருத்தொண்டர் புராணமாகக் கனிந்து பழுத்த காவியமே பெரியபுராணம் ஆகும்.

'செயற்பால தோரு மறனே : ஒருவற்
குயற்பால தோரும் பழி' என்றார் வள்ளுவப் பெருமானார். அறம் என்பது நல்வினை. அறஞ்செய்தல் என்பது நல்வினையை ஆற்றுதல். மாந்தர் யாவரும் நல்வினையை செய்ய விரும்புதல்வேண்டும் என்பது ஔவையாரின் கட்டளையாகும். ஆகவே அவர் 'அறஞ்செய்ய விரும்பு' என்று அருளினார். தமிழ் நூல்களில் இக்கருத்து பல நிலைகளில் வற்புறுத்தப்பட்டன. சமுதாயச் சூழலில் எழுந்த நூல்களில் சமயச்சார்புடன் அமைந்த நூல்களில் இது மிகவாக எடுத்துப் பேசப்படுகின்றது.

பெரியபுராணம் வரலாறு,இலக்கியம், இலக்கணம், சமயசாத்திரங்களை அடிப்படையாகக்கொண்டு செய்யப்பட்ட பெருங்காவியம் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய தமிழ்நாட்டுக் காவியங்கட்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டு மக்களைப் பற்றி எழுந்த காவியம் பெரியபுராணம் என்பர். பலர் பொருட்செல்வம் பெற்ற அடியார்கள் நல்ல வழிகளில் அப்பொருளை நல்ல வழிகளில் ஈட்டியவர்கள் ஈட்டிய பொருளை அவர்கள் அறத்தை வளர்க்கவே பயன்படுத்தினார். பெரிய புராணத்தில் வரும் நாயன்மார்கள் அறத்தை தம் வாழ்க்கை நெறியாகவே கருதிப் போற்றினார். காலத்தையும் இடத்தையும் கடந்த நிலையிலும் ஒல்லும் வகையான் எல்லாம் பிறருக்கு உள்ளத்தாலும் உரையாலும் செயலாளலும் நன்மை செய்வதையே அறத்தின் பொதுநிலை எனக்கொண்டு இவர்கள் ஒழுகினர். இவையே பெரியபுராணம் காட்டும் அறச்செயல்கள் ஆகும்.

சைவத் திருமுறைகளில் 12 ஆம் திருமுறையாக அமையும் பெரியபுராணம் மிகச்சிறந்த காப்பியமாகவும் உள்ளது. ஆதன் பக்திச்சுவை வாசகரையும் கேட்போரையும் பக்தி அனுபவத்தில் திளைக்க வைக்கும் தன்மை உடையது. உணர்ச்சியை மையமாகக் கொண்ட காவியங்களில் கதாபாத்திரங்களினால் வெளிப்படுத்தப்படும் உணர்ச்சிகள் வாசகரை அல்லது பார்வையாளர்களை சென்றடைந்து அவர்களது உள்ளத்தில் உறை நிலையில் உள்ள உணர்ச்சிகளைத் தூண்டி அவர்களும் அத்தகைய அனுபவத்தைப் பெறுவதற்கு உதவுகின்றது. புக்தி அனுபவமானது அத்தகைய காவியங்களில் மக்கள் ஈடுபாடு கொண்டு அவற்றை அறிந்துகொள்ளும் ஆர்வத்தைத் தூண்டுவதுடன் மக்கள் சமய அறிவு பெறவும் புலனடக்கம் தியானம் போன்ற பயிற்சிகளில் ஈடுபடவும் வழிவகுக்கின்றது. உள்ளத்து உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி மன ஒருமைப்பாட்டுடனும் தூய்மையுடனும் சமய அனுட்டானங்கள் வழிபாடு கிரியைகளில் ஈடுபடவும் சமயத் தொண்டு புரியவும் ஆர்வத்தைத் தூண்டுகின்றது.

இத்தகைய செயற்பாடுகள் யாவும் இறுதியில் ஆன்மீக ஈடேற்றத்தை பெறுவதற்குரிய சாதனங்களாக அமையும் என்பதில் ஐயம் இல்லை.இவ்வாறு வீடுபேற்றினை அடைந்த திருத்தொண்டர்களின் வரலாற்றை பக்திச்சுவை மிக்க காப்பியமாக வடித்து மக்களுக்கு அளித்த சேக்கிழாரின் சமயப்பணி என்றும் நினைவு கூறத்தக்கது.

# யோகர் சுவாமிகள்

'எல்லோரும் ஒரே குலம் எல்லோரும் ஒரு இனம்' என்ற பொன் வார்த்தையின் ஊடாக இந்துக்கள் ஒவ்வொருவரினதும் மன இல்லங்களிலும் குடிகொண்டு வாழ்ந்து கொண்டிருப்பவரே சிவ தொண்டனான யோகர் சுவாமிகள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மாவிட்டபுரத்தில் 1872 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 29ஆம் நாள் அம்பலவானர் சிவநாச்சியம்மையார் என்போருக்கு மகனாக அவதரித்தவரே மாமுனிவர் சிவயோக சுவாமிகள். இவரது இளமைப்பெயர் 'சதாசிவம்' என்பதாகும். யோகர் சுவாமிகளது குருப் பரம்பரையானது கடையிற் சுவாமிகளில் இருந்து தொடங்கும். அவரது சீடரான செல்லப்ப சுவாமிகளது முதன்மைச் சீடராக யோகர் சுவாமிகள் திகழ்ந்திருப்பது மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

தனது இளமைப் பருவத்திலேயே கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திலே தனது கல்வியைக் கற்று சிறந்த மாணாக்கனாகத் திகழ்ந்தார். இவர் கீரிமலையில் இருந்து நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு நடந்து வந்து வேலனை தரிசித்து விட்டுச் செல்வது வழக்கம். இதனை 'நல்லூரிலும் சிவ தொண்டனிலும் போய்க் கும்பிடு' என்ற கூற்றினூடாக அவர் நல்லூரானின் மீது கொண்ட அதீத அன்பையும் பக்தியையும் எடுத்துக்காட்டி நிற்கின்றது.

இது இவ்வாறு இருக்க 1897ஆம் ஆண்டில் சுவாமி விவேகானந்தரால் ஆற்றப்பட்ட ஆன்மீக சொற்பொழிவில் பங்கேற்று தனது ஆன்மீக ஆர்வத்தை மேன்மைப்படுத்தினார். இவ்வாறாக நல்லூரானைத் தரிசிக்க வந்த வேளையிலே யோகர் சுவாமிகளது விழிப்பார்வையானது தேரடி வீதியில் அமர்ந்திருந்த செல்லப்பா சுவாமிகள் மீது பட அவ்வனுபவத்தினை

'கருத்தில் நினைத்துருகி கைகூப்பந் தொண்டர்
வருத்தமெலாந் தீர்க்கும் வடிவேல்
திருத்தலத்தில் தேரடியில் தேசிகனைக் கண்டு
தரிசித்தேன் ஆரடா நீ? என்றார்'

என்று உருகிப் பாடுவதனூடாக நல்லூரான் மீது கொண்ட அவரது பக்தியும் செல்லப்பா சுவாமிகளது சிறப்பும் வெளிப்பட்டு நிற்கிறது. ஆன்றிலிருந்து யோகர் சுவாமிகள் செல்லப்பா சுவாமிகளது சீடராக வாழ்ந்து அவருடைய போதனைகளைச் செவிசாய்க்கத் தொடங்கினார்.

இவ்வாறு காணப்பட்ட யோகர் சுவாமிகள் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் காணப்பட்ட இலுப்பை மர நிழலிலே தியானம் செய்து கொண்டிருந்தார். காலஞ் செல்லச் செல்ல அவ்விடத்திலேயே மடமானது அமைக்கப்பட்ட பக்தர்களுக்கான போதனைகள் திருமுறைப் பாராயணம் என்பன இடம்பெற்று வந்தன. தினமும் திருநாவுக்கரசர் பெருமானது திருத்தாண்டகம் பாடப்பட்டது சிறப்பான தொன்றாகும். இவ்வாறு காணப்பட்ட யோகர் சுவாமிகளது போதனைகள்

'நீயும் மனிதன் நானும் மனிதன்"
"உன் கடமை போய்ச் செய்"
"இங்கு ஏன் வருகின்றாய் பிச்சைக்காரர்கள்
இங்கிருக்கின்றோம் எங்களைத் தொந்தரவு
செய்யாதீர்" என்று திட்டி அதன் பின்னர் அவர்களை அரவணைத்துப் போதனைகளை வழங்குவார்.

மேலும் இப் பெருந்தகை மது ஒழிப்புப் பரப்புரைக்காக சிவதொண்டர் எனும் இதழை 1935 இல் நடராசரை ஆசிரியராகத் துணைக்கொண்டு வெளியிட்டார். இதன் சான்றாக 1953இல் சிவத்தொண்டர் நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது..இது இன்று வரை பல்வேறு பிரதேசங்களில் இயங்கி வருவது யோகர் சுவாமி மீதான பக்தியினை வெளிப்படுத்தி நிற்கிறது.

யோகர் சுவாமிகளது பெருமைகள் இலங்கையில் மட்டுமல்ல கனடா, இலண்டன், ஆஸ்திரேலியா சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளிலும் பரவியிருந்தது. இவதை குருபூசைத்தினம் அங்கெல்லாம் கொண்டாடப்படுவதனூடாக அது வெளிப்பட்டு நிற்கின்றது. அமெரிக்காவில் இருந்து இலங்கை வந்த 22 வயதான ஓர் இளைஞரை சுப்ரமணியசுவாமிகள் எனும் நாமத்தினூடாகவும் சீடராககப்பட்டு அவரினூடாக யோகர் சுவாமிக்கான முதலாவது ஆச்சிரமமானது சென்பிராஸ்ஸிஸ்கோவில் அமைக்கப்பட்டு இன்று சிவமுருகன் ஆலயமாக வணங்கப்பட்டு வருவதனூடாக சிறப்புப் பெற்றுள்ளது. 'குருமருந்து நல்மருந்து' என்ற கூற்றிற்கிணங்க இலங்கையின் கடைசி ஆங்கிலேய ஆளுநரான சோல்டரி பிரபுவின் மகனான சாந்த சுவாமிகள் எனப்படும் நாமத்தினூடாக யோகர் சுவாமிகளது சீடராக விளங்கியமை மதம் தாண்டிய சிறப்பினை உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறான நல்லூரானது அருட் சிறப்பால் பல பணிகளை ஆற்றிய சிவயோக சுவாமிகள் 1964 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ஆம் திகதி ஆயிலிய நட்சத்திரத்தில் இணைந்தார்.

'எல்லோரிலும் சிவத்தைக் காண் என்பதற்கிணங்க நாமும் அவரது பாதத்தினைப் பற்றி வாழ்வோம்.

ப.ஆரணி

# கமலா ஹரிஸுக்கு வாக்களித்து இறையாண்மையை மீட்டு எங்கள் காணமல்போன குழந்தைகளை கண்டறிய உதவுக

## தமிழர் தாயக காணமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் வலியுறுத்து

அமெரிக்க தமிழ் மக்கள் கமலா ஹரிஸ‌ிக்கு வாக்களித்து எங்கள் இறையாண்மையை மீட்டு எங்கள் காணமல் போன குழந்தைகளை கண்டறிய உதவுங்கள் என தமிழர் தாயக காணமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

நேற்று (வியாழக்கிழமை) வவுனியாவ-ில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்கள், அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு கமலா ஹரிஸுக்கு ஆதரவளித்து, தமிழ் இறையாண்மையைப் பாதுகாக்கவும், காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் குழந்தைகளைக் கண்டறியவும் ஹரிஸ் உதவுவார் என்று நம்புகிறார்கள்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளைக் கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும், தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியைப் பெறவும் எமது தொடர் போராட்டம் இன்று 2,804 ஆவது நாளாகும். வவுனியா நீதிமன்றத்திற்கு முன்பாக, ஏ-9 வீதியில் உள்ள இந்த பந்தலில் எமது பயணம் தொடர்கிறது.

வவுனியாவில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்கள், கமலா ஹரிஸின் அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான முயற்சியில் அவருக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளனர். தமிழ் இறையாண்மைக்கு நீதி வழங்கவும், காணாமல் ஆக்கப்பட்ட அவர்களின் குழந்தைகளை கண்டறிய உதவவும் அவரது தலைமையால் முடியும் என்று நம்புகிறார்கள்.




இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்கள் தொடர்பில் பல வருடங்களாக அயராது விடை தேடி வரும் இந்த தாய்மார்கள், ஹரீஸ் இலகுவில் தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கையில் உள்ளனர். அமெரிக்கத் தேர்தல் நாளான நவம்பர் 5, 2024 செவ்வாய் அன்று கமலா ஹரிஸுக்கு ஆதரவாக வாக்களிக்க, அமெரிக்காவில் உள்ள புலம்பெயர் தமிழர்களை தாய்மார்யாகிய நாங்கள், எமது காணாமலாக்கப்பட்ட குழந்தைகளின் பெயரால் வேண்டி கொள்கிறோம்.

நீதி மற்றும் இறையாண்மைக்கான தமிழர் போராட்டத்திற்கு ஆதரவாக வலுவான பெண் தலைவர்கள் நின்ற வரலாற்றுப் பின்னணியில், நாம் கமலா ஹரிஸிற்கான ஆதரவு தெரிவிக்கிறோம். இங்கே வலுவான பெண் தலைவர்கள் நின்ற வரலாறு: முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி: தமிழ் இளைஞர்கள் இறையாண்மையுள்ள தமிழ் தேசத்தை அடைவதற்குப் பகிரங்கமாக ஆதரவளித்தார் மற்றும் முக்கிய உதவிகளையும் செய்தார்.

செயலாளர் ஹிலாரி கிளிண்டன்: சுதந்திரம் மற்றும் நீதிக்கான உலகளாவிய போராட்டத்தின் ஒரு பகுதியாக தமிழர் ஆயுதப் போராட்டத்தின் நியாயத்தன்மையை அவர் ஒப்புக்கொண்டார். தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா: இறையாண்மை மீதான தமிழர் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கடுமையாக வாதிட்டார், இலங்கை ஆட்சிக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்க வலியுறுத்தினார்.

ஐ.நா மனித உரிமைகள் அமைப்பின் தலைவராக இருந்த மிசெல் பாச்சிலெ, இலங்கை உள்நாட்டுப் போரின் போது நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை சேகரித்தார். லூயிஸ் ஆர்பர், ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் என்ற முறையில், தமிழ்ப் பொதுமக்களுக்கு நீதி கோரி, போரின் போது இழைக்கப்பட்ட அட்டூழியங்கள் குறித்து சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மற்றொரு ஐ.நா மனித உரிமை ஆணையாளரான நவநீதம்பிள்ளை, போர்க்குற்றங்களுக்கு இலங்கையை பொறுப்புக்கூற வைக்கும் முயற்சிகளுக்கு தலைமை தாங்கினார் மற்றும் தமிழர் உரிமைகளுக்கு ஆதரவாக ஐ.நா தீர்மானங்களை முன்வைத்தார்.

தமிழ் மக்கள், குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்கள், கமலா ஹரிஸிடம் நீடித்த மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான வலிமை, இரக்கம் மற்றும் உறுதிப்பாடு இருப்பதாக நம்புகிறார்கள்.

2009ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த சம்பவங்களை ஆராய்ந்து பார்த்தால், தமிழர்களின் படுகொலைகள் தொடர அனுமதித்த உலகளாவிய செயலற்ற தன்மை குறித்து அவர் வருத்தப்படுவார் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

தமிழ் மக்களைப் பாதுகாக்கவும், காணாமல் ஆக்கப்படவர்களுக்கான நீதியை உறுதிப்படுத்தவும், தமிழர் இறையாண்மையை மீட்டெடுக்கவும் நிரந்தரத் தீர்வை வழங்கக்கூடிய தலைவராக ஹரீஸ் காணப்படுகின்றார் எனத் தெரிவித்தனர். (05)

## ரஞ்சன் ராமநாயக்கவின் வேட்பு மனுவை சவாலுக்குட்படுத்தி நீதிமன்றில் வழக்கு



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு வழங்கப்பட்ட வேட்பு மனுவை சவாலுக்குட்படுத்தி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்க ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் பிரதான வேட்பாளராக எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடு கின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## ரூ. 1 கோடி 60 லட்சம் பெறுமதியான திமிங்கல அம்பருடன் இருவர் கைது

ஒன்றரை கிலோகிராம் அம்பருடன் (திமிங்கலத்தின் வாந்தி) இரண்டு சந்தேக நபர்கள் புதன்கிழமை அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பெந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் பெந்தோட்டை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிரிந்திவெல மற்றும் பியகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 31 மற்றும் 28 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட அம்பர் தொகையின் மொத்த பெறுமதி ஒரு கோடியே 60 லட்சம் ஷரூபா ஆகும்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## வாரியபொலயில் சடலம் மீட்பு!

வாரியபொல பொலிஸ் பிரிவிற்குப்பட்ட பாதெனிய பிரதேசத்தில் நீரோடையில் புதன்கிழமை சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


உயிரிழந்தவர் 35 வயதுடைய வாரியபொல, பொத்துவெள பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

சடலம் கிடந்த இடத்தின் அருகே உள்ள மின் கம்பத்தில் மோட்டார் சைக்கிள் சாய்ந்து கிடந்ததாக பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக குருணாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.


இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை வாரியபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## கேப்பாப்புலவு காணிகளை விடுவித்து தருமாறு முல்லை மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை









முல்லைத்தீவு - கேப்பாப்புலவு காணிகளை விடுவித்து தங்களிடம் ஒப்படைக்குமாறு நேற்று (வியாழக்கிழமை) காலை கேப்பாப்பிலவு மக்கள் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரனை சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளினை மீட்டுத் தருமாறு தமது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம், கேப்பாபிலவு கிராமமக்கள் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் மகஜரை ஒப்படைத்துள்ளனர்.

மகஜரை பெற்ற அரச அதிபர் எதிர்வரும் மாதம் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு ஆளுநர் வருகை தரவுள்ளார் எனவும் இவ் விடயம் தொடர்பில் நேரில் கதைப்பதாகவும் குறித்த மக்களிடம் தெரிவித்திருந்தார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மக்கள் , பல வருடகாலமாக தாம் தமது காணிகளை இழந்து சிரமங்களுக்கு மத்தியில் வாழ்வதாகவும் பல போராட்டங்கள் செய்தும் இதுவரை தீர்வு இல்லை என்றும் தமது காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

கேப்பாப்புலவு மக்களின் ஒருபகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் இன்னும் மக்களின் குடியிருப்புக்கள் காணிகள் இன்றும் இராணுவ கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன. அதனை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை 21 ஆம் திகதி வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களை குறித்த மக்கள் நேரில் சந்தித்து காணி விடுவிப்பு தொடர்பாக மகஜர் ஒன்றைக் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



# பிரான்ஸ் பதில் தூதுவர் பிரதமர் ஹரினி சந்திப்பு

இலங்கைக்கான பிரான்ஸ் பதில் தூதுவர் மாரி - நோயல் டூரிஸ /க்கும் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த சந்திப்பு பிரதமர் அலவலகத்தில் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

சந்திப்பின்போது இலங்கையுடனான பிரான்ஸின் நீண்டகால நட்பு குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், இலங்கைக்கு தொடர் ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவின் 75 வருட ஆண்டு நிறைவு குறித்தும் விசேடமாக கருத்து வெளியிடப்பட்டதுடன் இரு நாடுகளுக்குமிடையிலான பல்வேறு துறைகள் சார்ந்த ஒத்துழைப்புகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (05)

# வடக்கு, கிழக்கு இளைஞர்களிடம் அபிவிருத்தி ஆர்வம் தீவிரமாகிறது

## ரெலோ தலைவர் செல்வம் சொல்கிறார்

வடக்கு, கிழக்கில் உள்ள இளைஞர், யுவதிகள் மத்தியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆர்வம் காணப்படுகிறது. அத்துடன் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கையாளவேண்டும் என்னும் விடயத்தையும் அவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

இவ்வாறு வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். மன்னாரில் அவரது அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி வடக்கு, கிழக்கில் தேர்தல் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றது. இதனுடாக மக்களின் நிலைப்பாட்டையும் தெரிந்து கொண்டுள்ளோம்.

இளைஞர் மத்தியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆர்வம் காணப்படுகிறது. மேலும் இனப்பிரச்சினையும் தீர்ப்பதற்கான வழி வகைகளை நாங்கள் கையாளவேண்டும் என்கிற விடயத்தையும் எதிர்பார்க்கின்றனர்.

இந்த இரு விடயங்களையும் ஒரே திசையில் கொண்டுசெல்லவேண்டும் என்னும் சூழ்நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது.

திறமையுள்ளவர்கள் தெரிவு செய்யப்படாமல், ஆளும்தரப்புக்குச் சார்பானவர்கள் தெரிவு செய்யப்படும்போது, சில அமைச்சுப் பதவிகளைப் பெற்று தம்மோடு நிற்பவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுக்கொடுக்கின்றனர். இதனால் பெருமளவிலான இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஊழல் அற்ற அரசு எனக் கூறப்படுகின்ற தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சியின் கீழ் அனைத்து அபிவிருத்தி ரீதியான செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும் என்று இளைஞர்கள் கூறுகிறார்கள்.

எங்களுடைய தேர்தல் அறிக்கையிலும் நாங்கள் அபிவிருத்தியோடு, இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கான வழி வகைகள் குறித்தும் நாங்கள் சொல்லியாகவேண்டும் என்கின்ற நிலை இருக்கின்றது. இளைஞர்களின் கோரிக்கைகளை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனம் குறைக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகளை தேடிச் சென்றவர்களின் தொகை அதிகரித்துள்ளதான் காரணமாகவே ஆசனம் இங்கு குறைக்கப்பட்டுள்ளது.

பொதுவாகப் பார்க்கின்றபோது இளைஞர்களின் ஆர்வம் உள்நாட்டில் வேலை வாய்ப்புக்கள், தொழிற்சாலைகள் அமைத்தல் உள்ளிட்ட பொருளாதார ரீதியாக அவர்களின் சிந்தனைகள் செயல்பட ஆரம்பித்துள்ளது. எனவே இளைஞர், யுவதிகளின் சிந்தனைகளை ஒரு பெறுமதியாக ஏற்று நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்- என்றார்.

# தமிழ் மக்கள் தீர்க்கமாக முடிவெடுத்து தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களியுங்கள்

## கோருகிறார் மட்டக்களப்பு வேட்பாளர் வைத்தியர் சிறிநாத்

நாம் தற்போது ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் நிற்கின்றோம். அதனால் தமிழ் மக்கள் தீர்க்கமான ஒரு முடிவை எடுக்கவேண்டும். நன்கு சிந்தித்து தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களிக்கவேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர் வைத்தியர் சிறிநாத் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்குத் தெரிவு செய்யப்படும் போது வெளிநாட்டில் உள்ள உறவுகள் இங்குள்ள மக்களுக்கு வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை ஊழலற்ற முறையில் முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றனர். இங்கு நாம் கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவதன் மூலம் பல வேலை வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ளமுடியும். எனவே இந்தத் தேர்தல் காலத்தில் தமிழ் மக்கள் தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும்.

வெளிநாடுகளில் அரசை நம்பிப் பொருளாதார நடவடிக்கைகள் இருப்பதில்லை. எம்மிடமுள்ள வளங்களைப் பயன்படுத்தும்போதே எமது மக்களுக்கான உரிய தேவைகளை நிறைவேற்றும் சந்தர்ப்பம் உருவாகும். இந்த நிலையில் உரிய திட்டங்களை நாம் இங்குள்ள புத்திஜீவிகளின் உதவியுடன் முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றோம். எனவே மக்கள் தெளிவான நம்பிக்கையுடன் தமிழ் அரசுக் கட்சியையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தெரிவுசெய்ய முடியும். தமிழ்த் தேசியத்தை நேசிப்பவர்களாகவும் என்றும் சோரம் போகாதவர்களாகவும் எமது வளங்களை பாதுகாக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் நாம் செயற்படுவோம். எமது மக்களுக்கான அபிவிருத்திகளை முன்னெடுக்க நாம் என்றுமே தயாராக இருக்கின்றோம். இருப்பினும் கடந்த காலங்களில் காணப்பட்ட ஒரு மாயையுடன் கூடிய ஏமாற்றத்தைத் நாம் தவிர்த்து, எமது மாவட்டத்தில் இருந்து புதிய மாற்றத்தை உருவாக்கவேண்டும். அதற்காக இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எமது கட்சி வேட்பாளர்களை ஆதரித்து அதிகப்படியான தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களை நீங்கள் தெரிவு செய்ய வேண்டும் - என்றார்.



# மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி யாழ்ப்பாணத்திலும்

மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி யாழ் நகரில் நேற்று வியாழக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் தேசிய புற்றுநோய் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். பிராந்திய சேவைகள் பணிமனையின் தொற்றா நோயியல் பிரிவின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பொது நூலகம் முன்பாக தொடங்கிய இந்தப் பேரணி யாழ். நகர் ஊடாக யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் நிறைவடைந்தது.

யாழ். மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி த.தவஷரூபன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பேரணியில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், தொற்றா நோயியல் மருத்துவர் எஸ்.குகதாசன், ஞுபுற்றுநோயியல் வைத்திய நிபுணர் இ.கவிதா, யாழ். மாநகர ஆணையாளர் ச.கிருஸ் னேந்திரன், யாழ். மாநகர பிரதம பொதுச் சுகாராரப் பரிசோதகர் கு.பத்ம குமார், ஏனைய சுகாதார வைத்திய அதிகாரிகளான க.கௌசல்யா, பெ.நிபுணி சுலக்சனா, யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்ஷன், லயன்ஸ் கழகத்தினர், லியோ கழகத்தினர், யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர்கள் மற்றும் பொது அமைப்பினர் கலந்துகொண்டனர்.






காலைக்கதிர் Kalaikkathir

# 128 மீனவர்கள், 199 படகுகளை விடுவிக்க இந்திய மத்திய அரசுக்கு ஸ்டாலின் கடிதம்



இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 128 மீனவர்கள் மற்றும் 199 படகுகளையும் உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கும்படி இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழகமுதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து நேற்று (ஒக்.24) அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது -

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தைச் சேர்ந்த 16 மீனவர்கள் 2 இயந்திரப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நிலையில் கடந்த ஒக்.23ஆம் திகதி எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். இதுபோன்ற கைது சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து மீனவர்களின் குடும்பங்களுக்கு துயரத்தை ஏற்படுத்துவது குறித்து நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தேன்.

இருப்பினும் இத்தகைய கைது நடவடிக்கைகள் தடையின்றி தொடர்வதுடன் அவை கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு இடையூறாக உள்ளது. எனவே, இதுபோன்று நம் நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும் தமிழகத்தைச் சேர்ந்த 128 மீனவர்களையும் 199 மீன்பிடிப் படகுகளையும் விரைந்து விடுவிக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் கூட்டு நடவடிக்கைக் குழுவால் முன்மொழியப்பட்ட ஆலோசனைகள் மீனவர்கள் வாழ்வை சீர்குலைக்கும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிலையான தீர்வினைக் கொண்டுவரும் என நான் நம்புகிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (05)

# அமெரிக்க தூதுவர் சங் கீரிமலைக்கு வருகை



அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தன்கிழமை யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளதாவது -

அமெரிக்க - இலங்கை கூட்டாண்மைகளை முன்னிலைப்படுத்தி சாதகமான தாக்கத்தை ஏற்படுத்த வடக்கில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளேன்.

வடக்கு மற்றும் தெற்கில் உள்ள இலங்கையர்களின் முக்கிய இடங்களில் ஒன்றான யாழ்ப்பாணத்திலுள்ள வரலாற்று சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரம் கோவிலுக்கு எனது முதல் பயணத்தை மேற்கொண்டேன்.

இலங்கையின் பன்முகப் பாரம்பரியத்திற்கான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கும் வகையில், இது போன்ற கலாச்சார அடையாளங்களைப் பாதுகாப்பதற்கு ஆதரவளிப்பதில் அமெரிக்கா பெருமிதம் கொள்கிறது.

இந்தப் பயணத்தின்போது இங்குள்ள மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவர்களின் முன்னேற்றத்திற்கு அமெரிக்க எவ்வாறு தொடர்ந்து உதவலாம் என்பதை அவதானிக்க ஆவலுடன் காத்திருக்கிறோம் எனத் தெரிவித்துள்ளார். (05)



# இரண்டு பிள்ளைகளின் தாய் மின்சாரம் தாக்கியதில் சாவு

அம்பாந்தோட்டை, லுனுகம்வெஹெர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மின்சாரம் தாக்கி இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார் என லுனுகம்வெஹெர பொலிஸார் தெரிவித்தனர்.

யமுனா சதமாலி ஜயதிலக்க என்ற 28 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

உயிரிழந்த தாயார் தனது வீட்டின் ஜன்னலில் துணியை பொருத்துவதற்காகச் சுவரில் ஆணி அடித்துக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, உயிரிழந்த தாயாரின் இரண்டரை வயது குழந்தை, இரும்பு ஆணி ஒன்றை எடுத்து அருகிலிருந்த மின் இணைப்பில் பொருத்தி விளையாடிக்கொண்டிருந்துள்ளார்.

இதனை அவதானித்த எட்டு வயது குழந்தை, உயிரிழந்த தாயாரிடம் இது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

பின்னர், இந்த தாயார் உடனடியாக தனது குழந்தைகளை அங்கிருந்து வெளியே அழைத்துச் சென்று, மின் இணைப்பில் பொருத்தப்பட்டுள்ள இரும்பு ஆணியை வெளியே எடுக்க முயன்ற போது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த தாயாரின் கணவர் கொழும்பில் வேலை செய்து வருவதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லுனுகம்வெஹெர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 551 A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.10.2024 இல் வெளியிடப்பெற்றது.